# புதுவிதி
PUTHU VITHI

விலை 20/=

பக்கங்கள் 24

25 மே 2019

புதுமை : 03 விதி : 155


'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

# தசாப்தத்தின் பின்னரும் மனதைப் பிழிந்த நிகழ்வு





முஸ்லிம் தீவிரவாதத்துக்கு களமமைக்கும் சிங்கள பௌத்த மேலாதிக்கம்



முள்ளிவாய்க்கால் மருத்துவப் போராளியின் நேர்காணல்



அதிகார மோகத்தால் மறைக்கப்படும் பயங்கரவாதம்.



வேட்டையில் மட்டுமல்ல அன்பிலும் அலாதியானவன்

# தசாப்தத்தின் பின்னரும் மனதைப் பிழிந்த நிகழ்வு

**மட்டுநேசன்**

'மனதைப் பிழியும் நிகழ்வு" என்று சொல்வார்களே அதை இவ்வருட முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் அனுபவபூர்வமாகக் காண முடிந்தது. பொதுவாக நினைவேந்தலில் கூடிநின்று அஞ்சலித்தாலும் பந்தத்தில் வைத்த கற்பூரத்துக்கு முன்னால் தீப்பெட்டியை உரசும்போது தங்களது பிள்ளையையோ உறவையோதான் எவரும் முதலில் நினைப்பர். அதன் பின்னரே ஏனையோரை நினைப்பர். இவ்வாண்டு திடீர் மாற்றம். பொதுச் சுடர் ஏற்றப்படுவது குறித்த அறிவிப்பு வந்தவுடன் தமது உறவு பற்றிய நினைவைச் சில கணம் ஒத்திவைத்துவிட்டு பொதுச்சுடர் ஏற்றும் சிறுமி, அவளுக்கு ஏற்பட்டுள்ள நிலைமை, கொல்லப்பட்ட அந்தத் தாயார் பற்றியே எல்லோருக்கும் சிந்தனை எழுந்தது. குறிப்பிட்ட சிலருக்கே அந்தத் தாயாரையும் சிறுமியையும் முன்னர் தெரிந்திருந்தது. ஆனால் மனக் கண்ணில் எல்லோருமே தாயார் உயிரிழந்த நிலையில் கையையும் இழந்த குழந்தை எப்படிப் பசியாறியிருக்கும் என்ற அவல நிலையே தெரிந்தது. ஒரு தசாப்த காலம் முடிந்த பின்னருமா... இந்த அவலங்களுக்கு நீதி தர மறுக்கிறது சர்வதேசம் என்ற விடயம் உறைத்தது.

● ● ●

'உலகில் இந்த இனம் (தமிழர்) தனித்துப் போகப்போகிறதே என்பதுதான் எனக்குள்ள கவலை" என 1990 இல் பேராசிரியர் நுஃமான் சொன்ன வார்த்தைகளின் அர்த்தம் 2009 இல் புரிந்தது. பூஸாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அரசியல் கைதி ஒருவர் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். அதில் அவர் சில விடயங்களைக் குறிப்பிட்டிருந்தார்.

01. 'புதுக்குடியிருப்பிலோ, முள்ளிவாய்க்காலிலோ எண்ணெய்க்கிணறு இருந்திருந்தால் சர்வதேசம் அந்த அழிவில் இருந்து எம்மைக் காப்பாற்றியிருக்கும்" (குவைத்தில் சட்டபூர்வமான மன்னராட்சியை மீண்டும் ஏற்படுத்துவதற்காக குறோஸ் ஏவுகணையுடன் ஈராக் மீது யுத்தத்தை ஆரம்பித்ததல்லவா சர்வதேசம்?)

02. 'குறைந்த இடப்பரப்பில் கூடுதலான மக்களைக் கொல்வதற்காக தாங்கள் தயாரித்த பேரழிவு ஆயுதங்களின் திறனைப் பரீட்சித்துப் பார்க்கும் இலக்காக எமது மக்கள் கூட்டம் இருந்தது. இனி இவ்வாறான ஒரு சந்தர்ப்பம் இலகுவில் கிடைக்கப்போவதில்லை என ஆயுதங்களைத் தயாரிக்கும் நாடுகள் கருதியிருக்கலாம். மொத்தத்தில் பாதிக்கப்பட்டது எமது மக்களே" என அந்த நேரத்தில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறான ஆணைக்குழுவுக்கு கருத்துத் தெரிவிப்பதில் என்ன பயன் என்று கேட்கலாம். நாடாளுமன்றத்தில் உரையாற்றுவதில் பயன் கிடைக்கும் என்று எண்ணியா உறுப்பினர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். ஏன் ஜெனிவாவுக்குப் போகும் ஒவ்வொருவரும் தமது பயணத்தால் எமது இனத்துக்குப் பயன் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடனா செல்கின்றனர்? அந்தந்தக் காலத்தில் உரிய பதிவுகளைச் செய்ய வேண்டியது சம்பந்தப்பட்டோரின் தார்மீகப் பொறுப்பு. அது காலத்தின் கடமை. அதுபோலத்தான், முள்ளிவாய்க்கால் நினைவில் - அதிலும் கஞ்சிக் கொட்டிலை நினைவூட்டுவது காலத்தின் தேவை. இது ஒரு நினைவுக் கடத்தல் / கையளிப்பு. அந்த பொறுப்பை மறக்காமல் செய்ய வேண்டும் என்ற உணர்வு அங்கு கூடியிருந்த அனைவருக்கும் ஏற்பட்டது எனலாம்.

தென்னை மரத்தில் தேள் கொட்டினால் பனைமரத்தில் நெறி கட்டியது போல என்று சொல்வார்கள். உயிர்த்த ஞாயிறு அன்று நடந்த சம்பவங்களின் விளைவை தமிழினம் சுமக்க வேண்டியிருந்தது. தமிழ்த் தேசிய உணர்வை அடுத்த சந்ததியினருக்கு அஞ்சலோட்டம் போலக் கடத்தி வரும் பல்கலைக்கழக சமூகத்தை ஒரு கட்டுக்குள் கொண்டுவர, அரசு நினைத்தது. உப்புச்சப்பில்லாத காரணங்களைக் கூறி மாணவர் ஒன்றியத் தலைவரையும், சிற்றுண்டிச் சாலை உரிமையாளரையும் கைது செய்தது அரசு இயந்திரம். இவ்வாறான அழுத்தங்கள் மூலம் முள்ளிவாய்க்காலில் கூடுவோரின் எண்ணிக்கையை குறைக்க முடியும் என்பது அரசின் நம்பிக்கை.



அவசரகாலச் சட்டத்தைப் பற்றி மக்கள் பயப்படுவர் எனவும் அரசு கருதியிருக்கலாம். முள்ளிவாய்க்கால் வரை பயணித்தவர்களுக்குத் தொடர்ந்து முகாம்களில் துன்பங்களைச் சந்தித்தவர்களுக்கும் இனி எந்தத் துன்பமோ, சட்டமோ பெரிதாகத் தெரியாது. எப்போதுமே அவசரகாலச் சட்டம் என்பது சிறுபான்மையினரை அடிமைப்படுத்தவே பயன்படுத்தப்பட்டு வந்தது.

ஓரிரு நாட்களுக்கு முன்னர்தான், முகத்துவாரத்தில் குடியேறியிருந்த சிங்களவர் முல்லைத்தீவுக் கச்சேரியைப் பூட்டி வைத்துவிட்டு தமது காணிப் பிரச்சினைக்குத் தீர்வு வேண்டும் என்றனர். தமக்குச் சாதகமான தீர்வு கிடைத்த பின்னரே அங்கிருந்து அகன்றனர். எனவே அவசரகாலச் சட்டம் என்பது சிங்களவருக்கல்ல தமிழருக்கு மட்டுமே என்பதை உணர்ந்து கொண்டே பிரச்சினைகளை எதிர்கொள்ளத் தயாரானவர்கள் அங்கு கூடினர். நினைவேந்தலில் தமது கடமை முடிந்ததும், முல்லைத்தீவு வைத்தியசாலைக்குச் சென்று இரத்ததானம் செய்தனர் சிலர். இதெல்லாம் அறிவித்துச் செய்யும் விடயமல்ல. ஏதோ இந்த நாளில் எம்மாலானதைச் செய்வோம் என்ற உணர்வுடன் மேற்கொள்ளப்பட்ட காரியங்கள்.

அடையாள அட்டை கைவசம் இல்லாதவர்கள் வழிநெடுக சில மாவட்டங்களில் சோதனைச் சாவடிகளால் ஏற்படக் கூடிய தாமதங்கள் என்பனவற்றைக் கருத்தில் கொண்டே கணிசமானோர் அங்கு செல்ல முடியவில்லை.

அரசியல்வாதிகள் எப்படியோ அங்குகூடிய மக்கள் உணர்வெழுச்சியுடனேயே கலந்து கொண்டனர். நாட்டு நிலைமையால் புலம்பெயர் தேசத்தில் இருந்து இந்நாளின் மகிமையைக் குறைக்கும் அரூபக் கரங்களின் செயற்பாடுகளை வெளிப்படையாகக் காண முடியவில்லை. கடந்த ஆண்டு பிரதேச வேறுபாடுகளை ஏற்படுத்தும் நோக்குடனும் சில தரப்புகள் அணுகப்பட்டிருந்தன. இவ்வாறான சக்திகளின் எண்ணம் இம்முறை ஈடேறவில்லை. அதேபோல மக்களைக் கூறுபோட அண்மைக்காலமாகப் பகீரதப் பிரயத்தனம் செய்தோரின் கையும் ஓங்க முடியவில்லை. ஒற்றைக் கையால் சுடரேற்ற முனைந்த சிறுமிக்கு ஒரு பக்கம் கத்தோலிக்க மதகுருவும் மறுபக்கம் இந்து மதகுருவும் உதவிய காட்சி நெகிழ வைத்தது. மதத்தின் பெயரால் மாவீரர்களைக்கூட கூறுபோட முனைந்த சக்திகள் அடங்கியே இருந்தன. அந்த வகையில் வெற்றிதான்.

குறிப்பாக அரசியல்வாதிகள் அனைவரும் எந்தக் கட்சியாக இருந்தாலும் ஒரே மாதிரி நடத்தப்பட்டனர். எவருக்கும் தலைப்பாகை கட்டவுமில்லை. எவரையும் கழுத்தையோ, முதுகையோ பிடித்து வெளியே தள்ளவும் இல்லை. அந்த வகையில் மிகப்பொறுப்புடன் நடந்து கொண்டனர் ஏற்பாட்டாளர்கள். கடந்த வருடம் ஏற்பட்ட தவறுகளை கருத்தில் கொண்டு இந்த ஆண்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. அடுத்தடுத்த ஆண்டுகளில் இது மேலும் செழுமைப்படுத்தப்படும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. இனிவரும் காலங்களில் நினைவேந்தல்களுக்கு ஒட்டுமொத்த குத்தகைகாரர்கள் என்றோ, பினாமிகள் என்றோ எவரும் கருதப்படாமல் நிகழ்வுகள் நடத்தப்பட வேண்டும் என்பதே உறவுகளை இழந்தோரின் அவா. அரசியல்வாதிகள், உள்ளூராட்சி மன்றங்கள் தீர்மானிக்கும் சக்திகளாக தம்மைக் கருதிக் கொள்வதை விட்டுவிட வேண்டும். அதேபோல காசை வீசினால் ரிமோட்கொண்ட்ரோல் போல யாரையும் ஆட்டிப்படைக்கலாம் என எண்ணும் புலம்பெயர் சக்திகள் யதார்த்தத்தை உணர்ந்து கொள்ள வேண்டும்.

வட, கிழக்கு இணைப்பு சட்டரீதியாக எப்போது வேண்டுமானாலும் நடைபெறலாம் அல்லது இல்லாமல் போகலாம். ஆனால் மனதளவில் இந்த இணைப்பு முதலில் ஏற்பட வேண்டும். முள்ளிவாய்க்கால் நிகழ்வின் பெயரில் தமிழ் பேசும் உறவுகளான முஸ்லிம்களைக் கொச்சைப்படுத்தும் போக்கினை தம்மை அறிவாளிகள் எனக் கருதிக் கொள்வோர் கைவிட வேண்டும்.

(11ஆம் பக்கம் பார்க்க)

புதுவிதி
PUTHU VITHI

இனியொரு விதி செய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம்
தனி ஒருவனுக்கு உணவில்லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்.

புதுமை : 03 25 மே 2019 விதி : 155

# புத்தளத்தில் வெசாக் கூடுகள் எரிப்பு இன ஐக்கியத்துக்கு நெருப்பு



புத்தளம் சாலிய கிராமத்தில் இன ஐக்கியத்தை வலியுறுத்தும் முகமாக ஒரு பக்கத்தில் பௌத்த சின்னமும், மறுபக்கத்தில் சிலுவையும் பொறிக்கப்பட்ட 500 வெசாக் கூடுகள் தொங்க விடப்பட்டன.

அங்கு வந்த இளைஞர் குழுவொன்று உடனடியாக அவற்றை அகற்றியது மட்டுமன்றி ஓரிடத்தில் குவித்து எரியூட்டியது. பௌத்த நாடான இலங்கையில் பௌத்தத்துக்கும், கிறிஸ்தவத்துக்கும் சமஅந்தஸ்து கொடுத்து வெளிச்சக் கூடு கட்டுவதை எப்படி அனுமதிக்க முடியும் என அந்த இளைஞர்கள் மற்றவர்களை மிரட்டினர் எனவும் தெரிய வருகிறது.

இன, மத ஐக்கியம் என்றால் கூட பெரும்பான்மையினருக்கு சிறுபான்மையினர் கீழ்ப்பட்டவர்களாக அடிபணிந்து வாழ்ந்தால்தான் இலங்கையில் சாத்தியம் என ஒரு பெரியவர் கவலையுடன் கூறினார். இக் கூடுகளைக் காட்சிப்படுத்தப் பொலிஸார் அனுமதிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நம்பிக்கையில்லாப் பிரேரணையில் அமைச்சர் ரிஷாட் பதியுதீன்

அமைச்சர் ரிஷாட் பதியுதீன் மீது ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினரால் நம்பிக்கையில்லாப் பிரேரணை சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அவர் உயிர்த் தெழுகை குண்டுவெடிப்பு சம்பந்தமாகக் கைது செய்யப்பட்ட ஒருவரை விடுவிக்கும்படி இராணுவத் தளபதியிடம் கோரினார் என்பதுதான் குற்றச்சாட்டு.



அவரோ தான் அப்படிக் கேட்கவில்லை எனவும் கைது பற்றி மட்டுமே விசாரித்தேன் என்றும் அதற்கான ஒலிப்பதிவு ஆதாரங்கள் தம்மிடம் உண்டு எனவும் தெரிவித்திருந்தார். எனினும் நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சிலாபத்தில் முஸ்லிம்கள் மீது வன்முறையை மேற்கொண்ட சிலரை எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கைது செய்யப்படுவதில் இருந்து காப்பாற்றினார் எனக் குற்றம்சுமத்தப்பட்டது. அவர், தான் அப்படிச் செய்யாவிடில் பெரும் அழிவு நேர்ந்திருக்கும் என தயாசிறி கூறியிருந்தார். இதனால், அவர் மீது நடவடிக்கை இல்லை.

மினுவாங்கொடையில் கலகக்காரருடன் சிரித்துவ கட்டுமின் உபதலைவர் காணப்பட்டார் எனக் கூறப்பட்டது. அவர் சனநெரிசலாக இருந்ததால் என்னவென்று பார்க்கப் போனேன் எனக் கூறினார். அவர் மீதும் நடவடிக்கை எதுவுமில்லை.

ரிஷாட் மட்டும் பாவம் செய்த மனிதராகிவிட்டார். கடந்த காலங்களில் தமிழருக்கும் முஸ்லிம்களுக்கும் முரண்பாடுகளை ஏற்படுத்தும் சிங்கள அரசியல்வாதிகளைக் குளிர வைப்பதில் முன்னின்றவர் ரிஷாட்.

இப்போது தன்னைக் காப்பாற்ற சம்பந்தனிடம் உதவி கோரியுள்ளார். எனினும் ரணில் நன்றி மறவாமல் அவரைக் காப்பாற்றி விட்டார். அவர் ரிஷாட் பற்றி விசாரிக்க நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப் போகிறாராம். அதன் பின்பே நம்பிக்கையில்லாப் பிரேரணை பற்றித் தீர்மானிக்கப்படுமாம்.

**ஆறின கஞ்சி பழங்கஞ்சி**



# போலியோ மருந்து கொடுத்த பெண் பாகிஸ்தானில் சுட்டுக்கொலை

பாகிஸ்தானிலுள்ள பலுகிஸ்தான் மாகாணத்தில் சிறுவர், சிறுமியருக்கு இளம்பிள்ளை வாதம் வராமல் தடுப்பதற்கான போலியோ சொட்டு மருந்து வழங்கிய மருத்துவத் தொண்டர் பிரிவுப் பெண் ஒருவர் முஸ்லிம் தீவிரவாத இயக்கமான தலிபான்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரின் பாதுகாப்புக்குச் சென்ற இரு பொலிஸாரும் துப்பாக்கிச் சூட்டுக்கு ஆளாகி உயிரிழந்தனர்.

போலியோ தடுப்பு மருந்து என்ற பெயரில் கர்ப்ப தடை மருந்து வழங்கப்படுவதாகவும் முஸ்லிம்களின் சனத்தொகையைக் குறைப்பதற்கான சதியாகும் எனக்கூறி தலிபான்கள் தங்கள் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அதைத் தடை செய்திருந்தனர். ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் எல்லையிலுள்ள பலுகிஸ்தானில் தலிபான்கள் செல்வாக்கு செலுத்தி வருகின்றனர்.

இலங்கையிலும் கடந்த வருடம் ஒரு முஸ்லிம் கடையில் இறைச்சிக் குழம்பில் கர்ப்பத் தடை மருந்து கலக்கப்பட்டதாகக் கூறப்பட்டு பெரும் கலவரம் இடம்பெற்றது. இரண்டு மசூதிகள் தாக்கப்பட்டதுடன் பல முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் உடைக்கப்பட்டும், எரியூட்டப்பட்டும் சேதமாக்கப்பட்டன.

ஆனால், 48 மணித்தியாலங்களுக்கு மேல் வேலை செய்யும் கர்ப்பத் தடை மருந்துகள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என மருத்துவர்கள் உறுதியாகத் தெரிவிக்கின்றனர். ஊசி மூலம் ஏற்றப்படும் மருந்துகள் மட்டும் 90 நாட்கள் செயற்படுமெனக் கூறுகின்றனர். நிரந்தரக் கர்ப்பத்தடைக்கு சத்திர சிகிச்சை மட்டுமே சாத்தியம்.

ஆனால், இனவாதிகளுக்கு நோய்க்கான மருந்துகள் கூட கர்ப்பத்தடை மருந்தாகத் தெரிகின்றன.

**அருண்டவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேய்**

# கடந்தவார சமூக வலைத்தளங்களில்






























புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 493 2222
விளம்பரம் : 021 493 1111

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

puthuvithi@gmail.com

## நம் இனத்தின் சிறப்பறிவோம்... வந்தாரை வரவேற்போம்...

சரியாக ஒரு தசாப்தத்துக்கு முன்னர் எமக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட சம்பவங்களை மீட்டுப் பார்க்க வேண்டிய சூழலில் உள்ளோம். எம் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட போரால் வீடிழந்து - ஊரிழந்து - தேசம் இழந்து - நாடிழந்து அகதிகளாக விரட்டப்பட்டோம். ஊரிழந்து - தேசம் இழந்து - நாடு இழந்து 'ஏதிலி", 'அகதி" என்ற பெயரைச் சுமந்தவர்களாக வேறு ஊர்களிலும் தேசத்திலும் பிற நாடுகளிலும் நாம் பட்ட வேதனைகள் - வலிகள் - துன்பங்கள் - அவமானங்கள் இலகுவில் மறந்துபோகக் கூடியவையா...?

ஆனால், கடந்த எம் தலைமுறையினர் எப்படி வாழ்ந்தார்கள்...?

பகை கொண்டு வந்தவர்களுக்கு வீரத்தை வெளிப்படுத்தியவர்களின் வம்சாவளிகள் நாம். விருந்தாளியாக வந்தவர்கள் யாராக இருந்தாலும் வேறுபாடுகள் களைந்து, அவர்களை உறவுகளாக ஏற்று இன்முகத்துடன் வரவேற்று விருந்தோம்பியவர்களின் வாரிசுகள் நாம். ஏதிலிகளாக வந்தவர்களுக்கு அடைக்கலம் கொடுத்து எம் உயிர் கொடுத்து அவர் உயிர் காத்தவர்களின் பரம்பரையினர் நாம். பசுவுக்குத் தீங்கிழைத்தது தன் மகன் என்றறிந்து அந்தப் பசுவுக்கும் நீதி கிடைக்கச் செய்தவனின் தலைமுறையினர் நாம்.

ஆனால் இன்று எப்படி வாழ முனைகிறோம்...?

எம்மைப் போலவே நாடு இழந்து தஞ்சம் புகுந்த பாகிஸ்தான், சிரியா, ஆப்கானிஸ்தான் மக்களை எமது தேசத்துக்குள் அனுமதிக்க மறுக்கிறோம் வெளியேற்றத் துடிக்கிறோம்.

அடிப்படை வாதத்தின் பெயரால் ஒரு சிலர் செய்த குற்றத்துக்காக அவர்களின் ஒட்டுமொத்த சமூகத்தையும் புறக்கணிக்கத் துடிக்கிறது நம் தலைமுறையின் ஒரு பகுதி. அகதிகளாக வந்தவர்களை வரவேற்காது விடினும்கூட பரவாயில்லை. அவர்களை நம் தேசத்துக்குள் அனுமதிக்காது - விரட்டி அடித்து விடத் துடிக்கிறோம். இதுதான் நமது விருந்தோம்பும் பண்பா?

போரால் ஏதிலிகளாகி நாம் சென்ற தேசங்களும் இவ்வாறுதான் நடந்தனவா? போரின் வலியை - ஊரின் - தாய்நாட்டின் - உறவுகளின் பிரிவுகளைத் தாங்காது தவிக்கும் நாம், எம்மைப் போன்றே ஊரிழந்து - உறவிழந்து - நாடிழந்து எம்மிடம் தஞ்சம் அடைய வந்துள்ள மக்களுக்கு வழங்கும் நீதி இதுதானா...?

நம்மை ஆதரித்து - தங்களின் மக்களாகவும் - உறவுகளாகவும் ஏற்றுள்ள உலக நாடுகளின் மக்களுக்கு நாம் காட்டும் நன்றியும் பண்பாடும் இதுதானா?

அடிப்படை வாதத்தின் பெயரால் ஒரு சிலர் செய்த தவறுக்கு ஒட்டுமொத்த சமூகத்திற்கும் தண்டனை கொடுத்துவிடத் துடிக்கும் நம் செயலை நம் மூதாதையர்தாம் - நமக்கு வழிகாட்டிய தலைமகன்கள்தான் ஏற்பார்களா?

நாம் நம் இனத்தின் சிறப்பறிவோம் - குணமறிவோம், வந்தாரை வரவேற்போம் - வாழ வைப்போம்.

'யாதும் ஊரே... யாவரும் கேளிர்"

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

# ஈழத்தின் இறுதிப் போர் சாட்சியாய்...! 52

- வன்னிமகள்
எஸ்.கே.சஞ்சிகா

போரின் கடைசிப் பகுதியில் எலும்புத்துண்டுக்கு இரையாகிய பலர் வலம் வரத் தொடங்கியிருந்தனர். பிரிந்து சென்ற புலிகள் யார்? கடைசி வரை நின்ற புலிகள் யாரென மக்களால் பிரித்தறிய முடியவில்லை. கைக்கூலிகள் ஆனோரே கட்டாய ஆட்சேர்ப்பில் ஈடுபட்டார்களா? இலட்சியத்தை விட்டுவிடக்கூடாது என்ற வெறித்தனத்தோடுதான் சிலர் நடந்தார்களா? பலமறியா பலவீனர்களானதால் நிலையறியாச் செயல்களைச் செய்து நிந்திப்புக்கு உள்ளாகினர்.

நடந்தால் மனம் களைப்பாறும் என நடந்தபோது முக்காடுகளோடு வேதனையின் கோடுகளைச் சுமந்து போராளிகள் கண்ணில் தெரிகிறார்கள். கதைப்பவர்களோடு கதைத்தால் போதும் என மனம் நினைத்தது. ஆனால், அவர்களில் சிலர் அரக்க மனதோடு இருந்ததை காலம் பதிவு செய்யப்போகிறது என்பதை அவர்கள் உணரவில்லை. பேருந்து புறப்பட்டது. பயணம் தொடர் கதையானது. இரவு 7.00 மணியளவில் ஓமந்தை சோதனைச் சாவடியில் இறங்கி ஓரிடத்தில் இருத்தப்பட்டோம்.

'ஒரு நாள் புலியா இருந்தவர்களும் சரணடையுங்க. புலியா பயிற்சி எடுத்தவை சரணடையுங்க", அடிக்கடி கேட்கும் அந்த அறிவிப்பு ஒலிபெருக்கிச் சத்தம் அச்சத்தை தந்தாலும் உள்ளுக்குள் ஒருவித நகைப்பையே தோற்றுவித்தது. வன்னியில் இருந்த அத்தனை பேரும் கிராமியப்படை, மாணவர்படை, எல்லைப்படை, புலிப்படை என பயிற்சி பெற்றவர்களே. அனைவருக்கும் சூட்டுப்பயிற்சியும் வழங்கப்பட்டதே. பயிற்சி பெற்ற அனைவரும் புலிகள் என்றால், வன்னியில் இருந்த அனைவரும் புலிகளே.

தலைமுடி ஒட்ட வெட்டப்பட்ட பெண் பிள்ளைகளையும், ஆண் பிள்ளைகளையும் இராணுவத்துக்கு துல்லியமாக இனம் காட்டி காட்டிக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள் புலிப் போராளிகள். ரோர்ச் லைற் (Touch Light) அடித்து ஒவ்வொருவர் முகத்தையும் தேடிப்பிடித்தபோது முதுகிலே குத்தினார்கள்.

'டேய் அறிவிக்கிறது கேட்குதில்லைப் போல. எழும்படா" அந்த காட்டிக் கொடுத்த அயோக்கியர்கள் உறுமலை மறந்து கர்ச்சித்தார்கள்.

'ஐயோ! கெடு குடிகளே!
விடுங்கோடா பிள்ளைகளை...",
என்ற தாய்மாரின் ஓலங்களை அவர்கள் கேட்கத் தயாரில்லை.

சந்தோஸ் எனக்கு முன்னே இருந்தான். அவன் என்ன நினைத்தானோ தெரியவில்லை. தானாக பயத்தில் எழுந்து போவோரோடு போவதற்கு எத்தனித்தான்.

"தம்பி இரு", என கையைப்பிடித்து இருத்த முயற்சித்தேன்.

என் கைகளில் அவனது கண்ணீர்த் துளிகள் விழுவதை உணர முடிந்தது.

அவன் கையை விடுவித்தபடி 'அத்தான் போறேன்", என்று சரண டைந்த போராளிகள் பகுதிக்குப் போய்க் கொண்டிருந்தான்.

நாங்கள் இன்னொரு பகுதிக்குள் அழைக்கப்பட்டோம். எங்களை விசாரித்தார்கள். குடும்ப விபரங்களைப் பதிவு செய்தார்கள். போரிலே யாராவது இறந்ததா என கேட்டார்கள்.

நான் எனது குழந்தை இறந்ததை பதிவு செய்தேன்.

'இறந்தவருக்கு எத்தனை வயது?"

'மூன்று"

'இல்லை புலியில இருந்து இறந்திருக்கிறார். நீங்க பொய் சொல்றது", அவனது 'கொட்டியா" உச்சரிப்பில் புலி இருப்பதை என்னால் உணர முடிந்தது. அதனால் ஏதோ விபரீதமாகக் கேட்கிறான் என்று உள்மனம் எச்சரித்தது.

"Are you speaking English? I don't know your language." என சற்று உரத்துக்கூறினேன்.

பக்கத்தில் கணவரை விசாரித்துக் கொண்டிருந்த முஸ்லிம் அதிகாரி மொழிபெயர்ப்பு செய்ய உதவினார்.

எனது நிலைமையை அந்த சிங்கள இராணுவ அதிகாரிக்கு எடுத்துக்கூறினார். வீண்பழி போட நினைத்த அந்த இராணுவ அதிகாரியின் சட்டைப் பையில் "அசோகரட்ண குஞ்சிபண்டார" என பொறிக்கப்பட்டிருந்தது.

அந்த முஸ்லிம் அதிகாரிக்கு நன்றி கூறிய போது அவனது பெயரை அவதானித்தேன். 'சலீம் மரக்காயர்". இப்படி இரு மொழிப்புலமையோடு இருந்ததால் முஸ்லிம்களால் தமிழர்களின் விபரங்கள் விளக்கக் குறைவுகள் நிவர்த்தி செய்யப்பட்டன.

மீண்டும் பேருந்தில் ஏறினோம். கணவர் அமைதியாக, நிதானமாக சொன்னார், 'குழந்தை இறந்ததை சொல்வதால் அவன் உயிரோடு வரப் போவதில்லை. எங்கள் துயரம் யாருக்கும் விளங்கப்போவதும் இல்லை. அவனைப்பற்றி கதைப்பதை விட்டிடுங்க"

பேருந்து புறப்பட்டது. ஓமந்தையால் புறப்பட்ட பேருந்துகள் வவுனியா செட்டிக்குளம் நோக்கிச் சென்று முட்கம்பி வேலிகளால் அடைக்கப்பட்ட நன்கு பாதைகள் போடப்பட்ட, தரப்பாள் குடில்கள் நிறைந்த ஓரிடத்திற்குள் சென்றது.

அந்த முள்கம்பி வாயில் அகலத் திறந்து அகதி அடிமைகளை உள்ளே ஈர்த்துக்கொண்டது.

இராணுவத்தினர் இரும்புத் தொப்பிகள், கனரக ஆயுததாரிகளாக வரவேற்பு கையசைக்க அந்த முகாமுக்குள் நாம் அழைக்கப்பட்டோம். பிரகாசமான கண்ணைக்கூசும் வெளிச்சங்களோடு மின்குமிழ்கள் அடிமை மக்களை சிரித்து வரவேற்றது.

நாங்கள் சிறிது தூரம் நடந்து சென்றோம். கூடாரங்கள் எமக்காக காத்திருந்தன. வலயம் நான்கு (zone 4) முகாமில் தங்க வைக்கப்பட்டோம். இரவுப் பயணமும் பயமும் களைப்பும் நிறைந்திருக்க கிடந்த துணிகளை நிலத்தில் விரித்து உறங்கத்தொடங்கினோம். காட்டுப் பறவைகள் கத்தும் ஓசையும் தாலாட்டா தவிப்பா? புரியவில்லை. உறங்கி விட்டோம்.

(சாட்சியம் நீளும்)

முள்ளிவாய்க்கால்
மருத்துவப் போராளி அலன்

# என் கண்ணெதிரே மருத்துவமனை எரிந்தது...!

## காயப்பட்டவர்கள் சிதறிப் பலியாகினர்...!

விடுதலைப் புலிகளின் அனைத்துப் பிரிவுகளையும்போல மருத்துவப் பிரிவும் இறுதிநாள் வரை மக்களுக்காக பணி செய்த பிரிவு. ஓர் அவசர ஊர்திக்குள் வைத்து இறுதியாக சத்திரசிகிச்சை செய்த வரலாற்றையும் தன் மீது பதிந்து கொண்ட பிரிவு இது. அவ்வாறான பெரும் பணியைச் செய்து தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகள் மட்டுமல்லாது, தமிழீழ மக்கள் மட்டுமல்லாது யாருக்கு எதிராக போர்க் கருவி ஏந்தி களமாடினார்களோ அந்த எதிரிகளையும் கூட தன்நிறைவோடு பாதுகாத்தவர்கள் எம் மருத்துவப் போராளிகள். அவ்வாறாக இறுதி நாள் வரை தமிழீழ விடுதலைப் புலிகளின் இறுதியான மருத்துவமனையை, அதாவது போராளிகளால் நிர்வகிக்கப்பட்ட மருத்துவமனையை பொறுப்பாக இருந்து களப்பணியாற்றிய மருத்துவப் போராளி அலன் அவர்களின் நேர்காணல்.

**மருத்துவத் துறையில் உங்களின் போராளிகள் மற்றும் மக்களுக்கான மருத்துவப் பணிகள் எப்படி இருந்தன?**

பெரும்பாலான பணி எனக்கு பொன்னம்பலம் நினைவு மருத்துவமனையில் தான் இருந்தது. பெரும் காலங்கள் அங்கே சத்திர சிகிச்சைகூடங் களிலையே மக்களுக்கான சிகிச்சைகளை வழங்கி வந்தேன். அத்தோடு கடற்புலிகளின் படையணி மருத்துவராகவும் கடமையாற்றினேன். அவ்வாறான காலங்களில் படையணி மருத்துவமனைகளான நெய்தல் மற்றும் முல்லை ஆகிய படையக மருத்துவமனைகள் இயங்கியபோது அம் மருத்துவ மனைகளிலும் என் பணி விரிந்திருந்தது.

**மருத்துவர் பொன்னம்பலம் நினைவு மருத்துவமனை பற்றி கூறுங்கள்.**

உண்மையில் எமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பெரும்பாலும் மருத்துவ வளங்கள் குறைவு. அதாவது மருத்துவர்களோ அல்லது மருத்துவப் பொருட்களோ எமக்குத் தாராளமாகக் கிடைப்பதில்லை. அதனால் மக்களுக்கான மருத்துவப் பணிகளை சீர்படுத்துவதற்காக எமது தலைமையின் ஆலோசனையின் பெயரில் நவீன தொழில்நுட்பங்கள் கொண்ட மருத்துவமனைகளை 1996 ஆம் ஆண்டு தொடங்கினோம். அங்கே வாழ்ந்து வந்த அரச மருத்துவர்களின் ஆலோசனைகளும், உதவிகளும் பெறப்பட்டு போராளி மருத்துவர்களை வைத்து நிர்வகிக்கத் தொடங்கினோம்.

இம் மருத்துவமனையில் இருந்த மருத்துவர்கள் மக்களுடன் நெருங்கிப் பழகி ஆற்றுகைப்படுத்தல் முறைமை என்பது உச்சமாக இருக்கும். மருந்தைவிட ஒருவரின் மனதில் 'நீ வருத்தக்காரன் இல்லை" என்ற நினைப்பை ஊட்டினாலே



பெரும்பாலான நோய்கள் இல்லாது போய்விடும். இது பண்டைய காலங்களில் இருந்து வந்த மரபு. அதைப் போல அங்கே பணியாற்றிய அரச மருத்துவர்களாக இருந்தாலும் சரி போராளிகளாக இருந்தலும் சரி மக்களை நெருங்கி நின்றார்கள்.

**பொன்னம்பலம் நினைவு மருத்துவமனை அரச மருத்துவமனைகளை விட சிறப்பாக இயங்கியது. அது எவ்வாறு சாத்தியமானது?**

இது தேசியத் தலைவரின் உன்னத நோக்கங்களில் ஒன்றாக இருந்தது. பெரும்பாலான அரச மருத்துவமனைகளில் இல்லாத நவீன வசதிகள் அங்கே இருந்தன. சத்திரசிகிச்சைக் கூடம் நவீனமாக உருவாக்கப்பட்டது. இலவசமாக மக்களுக்கான மருத்துவத்தை இதனூடாக கொடுக்க முடியவில்லை என்றாலும் தெற்கோடு ஒப்பீட்டளவில் மிகக் குறைந்த செலவுடனான மருத்துவசிகிச்சைகளை மக்கள் பெறக் கூடியதாக இருந்தது.

**அரச மருத்துவர்கள் போராளிகளுடன் இணைந்து பணியாற்றுவதில் சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றனவா?**

இல்லை என்றே நான் கூறுவேன். அவர்களும், நாங்களும் இணைந்துதான் அதிகமான காலங்களில் பணியாற்றி இருக்கின்றோம். அங்கே பணியாற்றிய பல மருத்துவர்களின் மிகப் பெரும் பங்கு எமது போராளி மருத்துவர்களை உருவாக்குவதில் இருந்தது. அதேநேரம் அவர்கள் மக்களுக்கான மருத்துவப் பணியிலோ, போராளிகளின் மருத்துவப் பணியிலோ தயக்கமின்றி ஈடுபட்டார்கள். ஆனால் அவர்களின் நிர்வாகத்துக்குள் நாமோ, எமது நிர்வாகத்துக்குள் அவர்களோ கட்டமைப்பு ரீதியாக பங்கெடுத்தது இல்லை. மக்கள் பணிக்காக நாம் இணைந்திருந்தோம்

**மருத்துவத் தடை, பொருளா தாரத் தடை என்பன இறுக்கமாக இருந்த காலங்களில் மருத்துவ மனையை எவ்வாறு இயக்கினீர்கள்?**

இது மக்களுக்காக எம் மருத்துவப் பிரிவால் இயக்கப்பட்ட மருத்துவமனை. அதனால் எமது படையக மருத்துவமனைகளுக்கு மருத்துவப் பொருட்கள் கடல் மார்க்கமாக கொண்டு வருவதைப் போலவே அப் பிரச்சினைகளை நாம் கையாண்டோம். அதற்காக எமது பிரிவுக்குள் மருத்துவக் களஞ்சியம் மற்றும் கொள்வனவுப் பகுதி என்பன பிரத்தியேகமாக இயங்கின.

**பொன்னம்பலம் நினைவு மருத்துவமனை தனியார் மருத்துவ மனையாக இயங்கிதால் (இலவச மாக இயங்காத நிலையில்) அனைத்து வகையான மக்களும் சிகிச்சையை பெறுவதற்கு சந்தர்ப்பம் இல்லை அதை எவ்வாறு கையாண்டீர்கள்?**

எமது விடுதலைப் போராட்டம் மக்களுக்கான சுதந்திரத்துக்கானது. இதில் சிகிச்சைக்காக வரும் மக்களிடம் நாம் பணத்தை மிக முக்கியமாக எதிர்பார்க்கவில்லை. மிக அவசரமான அல்லது முக்கியமாக செய்ய வேண்டிய சிகிச்சைகளை நாம் இலவசமாகவே செய்தோம். அதே நேரம் அனைத்து மக்களும் சிகிச்சை பெறக் கூடியதாக தியாக தீபம் திலீபன் இலவச மருத்துவமனையை உருவாக்கி அதனூடாக அனைத்துவகை மக்களும் சிகிச்சை பெறக் கூடிய சூழலை உருவாக்கினோம்.

**இறுதிச் சண்டை நடந்து கொண்டிருந்த போது பொன்னம்பலம் மருத்துவமனை மீது இலங்கை அரசின் வான்படை தாக்குதலை மேற்கொண்டது. அப்போது அங்கே என்ன நடந்தது?**

புதுக்குடியிருப்பு மருத்துவர் பொன்னம்பலம் நினைவு மருத்துவமனையைப் பொறுத்தவரை சத்திரசிகிச்சை கூடம், விடுதிகள், வெளிநோயாளர் சிகிச்சை பகுதி , நிர்வாகப் பகுதி என பல பகுதிகளை கொண்டிருந்தது. அதில் இறுதி நேரம் எமது மருத்துவமனைக்கு தாக்குதல் நடக்கலாம் என்று எமது "வான் தாக்குதல் கண்காணிப்பு பிரிவினால்" அறிவுறுத்தப்பட்டமைக்கு அமைவாக சத்திரசிகிச்சைக் கூடத்தை உடனடியாக நாம் இரணைப்பாலைப் பகுதியில், சத்திரசிகிச்சைக் கூடத்தை இரண்டு பிரிவுகளாக பிரித்து அங்கிருந்த இரு வீடுகளுக்கு மாற்றினோம்.

அதேநேரம், மல்லாவி, அக்கராயன்குளம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மற்றும் நட்டாங்கண்டல் போன்ற மருத்துவமனைகளை ஒன்றிணைத்து மாத்தளன் பாடசாலையில் ஒரு மருத்துவமனையையும் இயக்கினோம். அங்கே தங்கி இருந்த நோயாளர்களை இடம் மாற்றுவதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. அந்த நிலையில் தான் எமது மருத்துவமனை மீது சிங்கள வான்படை தாக்குதலை செய்தது. அதில் 60 இற்கும் மேல் மக்கள் சாவடைந்தார்கள். பலர் காயமடைந்தார்கள்.

**இத்தாக்குதல் திட்டமிட்டு பொன்னம்பலம் நினைவு மருத்துவ மனைக்கு மட்டுமா அல்லது அரச மருத்துவமனைகளுக்கும் நடாத்தப்பட்டதா?**

மருத்துவமனைகள் மீது தாக்குதல் நடத்துவது சிங்களப் படைகளுக்கு ஒன்றும் புதிய விடயமல்ல. வழமையாகவே சிங்கள தேசம் செய்கின்ற விடயம்தான். அதுவும் மருத்துவமனைகள் என்று அடையாளமிடப்பட்டிருந்த போதும் ( சிவப்பு நிற, குறியீடு) எந்த மனச்சாட்சியும் இன்றி நோயாளர்கள் மீது தாக்குதல் நடத்தியது சிங்களப்படைகள்.

(மறு பக்கம் பார்க்க)

**அத் தாக்குதல்களில் மருத்துவர்கள், நோயாளர்கள் அல்லது பணியாளர்கள் சாவடைந்திருக்கிறார்களா?**

ஓம்..., பல தடவைகள் நடந்திருக்கின்றது. இறுதிச் சண்டையில், கிளிநொச்சியில் இருந்து முள்ளிவாய்க்கால் வரை நாம் எடுத்துக் கொண்டால், கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை தொடக்கம் தர்மபுரம், புதுக்குடியிருப்பு, உடையார்கட்டு, வள்ளிபுனம் எனத் தொடர்ந்து இறுதியாக முள்ளிவாய்க்கால் வரை தாக்குதலை நடத்தியது இனவாதப்படை. இவ்வாறான தாக்குதல்களில் பல மருத்துவர்கள் சாவடைந்திருக்கிறார்கள். அதிலும் பல மருத்துவ போராளிகள் மருத்துவமனைகளில் சிகிச்சை வழங்கிக் கொண்டிருந்த போது நடத்தப்பட்ட எறிகணைத் தாக்குதல்களில் வீரச்சாவடைந்தார்கள்.

குறிப்பாக மேஜர் அல்லி, செவ்வானம், இறையொளி என்று எமது போராளி மருத்துவர்கள் இறுதிச் சண்டை நேரம் மக்களுக்கான மருத்துவப் பணியில் அதுவும் சத்திரசிகிச்சைக் கூடத்தில் சத்திரசிகிச்சை செய்து கொண்டிருக்கும் போது வீரச்சாவடைந்தார்கள்.

**இவ்வாறான மக்கள் பணியில் நின்ற போராளி மருத்துவர்கள் மீதான தாக்குதல்களை சிங்கள தேசம் விடுதலைப்புலிகள் மீது தாக்குதல் நடத்தியதாக அறிவித்திருந்தது. இது உண்மையா?**

ஓம், புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையில் முல்லைத்தீவு மாவட்ட, கிளிநொச்சி மாவட்ட, மல்லாவி ஆதார வைத்தியசாலை ஆகியவை இயங்கிக் கொண்டிருந்த போது இராணுவம் புதுக்குடியிருப்புப் பகுதியைக் கைப்பற்றுவதற்கான முயற்சியில் ஈடுபட்டு வந்தது. அப்போது மருத்துவமனை வளாகத்துக்குள் திட்டமிட்டு சிங்களப் படைகள் தாக்குதலை நடத்தின. அந்த நிலையில் பல நோயாளர்கள் இறந்து போனார்கள்.

நான் அப்போது இரணைப்பாலை மருத்துவமனையில் பணியில் நின்றேன். எனக்கு தகவல் ஒன்று வந்தது. உடனடியாக மருத்துவமனையை பின் நகர்த்துமாறு பணிக்கப்பட்டதனால் அங்கே பொறுப்பாக நின்ற மருத்துவ அதிகாரிகள் புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் இருந்து பின் நகர்ந்திருந்தனர். அங்கிருந்து வெளியேறும்போது பல மருந்துகளைத் தவற விட்டுள்ளனர் என்ற அத்தகவல் தெரிவித்தது. அதனால் அவற்றை எடுத்து வருவதற்காக நான் இன்னும் ஒரு தம்பியை அழைத்துக் கொண்டு மருத்துவமனைக்கு சென்றிருந்தேன்.

அப்போது அங்கே சிறுவர்கள், பெரியவர்கள் என்ற வித்தியாசம் இன்றி 20 க்கும் மேலான மக்கள் இறந்து போயிருந்தார்கள். அவர்களைக் கடந்தே நான் மருந்துக் களஞ்சியம், மருத்துவர் விடுதி என அனைத்து இடங்களையும் அலசி அம்மருந்துகளை எடுத்து வந்தேன். ஆனால் சிங்கள வல்லாதிக்கத்தின் ஊடகவியலாளரான சமன்குமார ராமவிக்ரம, அடுத்த நாள் அரச செய்தி ஊடகமான ரூபவாகினியில் விடுதலைப் புலிகள் தங்கி நின்ற மருத்துவமனை வளாகம் மீது நடந்த தாக்குதலில் 12 விடுதலைப் புலிகள் பலியாகினர் என்று அறிவித்தார்.

இந்த இடத்தில் ஒன்றை நான் உறுதியாகக் கூற முடியும். எம் போராளிகள் இறுதி நேரத்தில்கூட வீரச்சாவடைந்த போராளிகளின் வித்துடல்களை கைவிட்டு வருவதை விரும்புவதில்லை. அதேநேரம் புதுக்குடியிருப்பு மருத்துவமனை மீது சிங்களப்படை தாக்குதல் நடத்தியபோது எமது படையணிகள் தங்களது நிலையை புதுக்குடியிருப்பு கேப்பாப்பிலவு வீதிக்கு அருகில் அமைத்திருந்தார்கள். இந்த நிலையில் எம் போராளிகள் வீரச்சாவடைந்திருந்தால் அவர்களது வித்துடலை கைவிட்டு வர யாரும் நினைக்க மாட்டார்கள். 12 வித்துடல்களையும் கைவிட்டு வருமளவுக்கு போராளிகள் என்றும் இல்லை. அதை விட ரூபவாகினி காட்டியதைப் போல அங்கே எந்த துப்பாக்கிகளும் இருக்கவில்லை. தளபாடங்கள் மட்டுமே உடைந்த நிலையில் சிதைந்து கிடந்தது.




அதை விட இத் தாக்குதலில் மக்கள் தான் சாவடைந்தார்கள் என்பதற்கு நான் ஒரு சாட்சி.

**புதிதாக மருத்துவமனைகள் அமைக்கப்படும்போது புவியியல் நிலை தொடர்பாக அரசுக்கு தெரியப்படுத்துவதில்லையா?**

எங்கெல்லாம் மக்களுக்கான மருத்துவமனைகளை நிறுவுகிறோமோ அந்த இடத்தின் புவியியல் நிலையை (GPS – Global Positioning System) சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் (ICRC) ஊடாகக் கொடுப்போம். அதை விட கூரைகளில் சிவப்பு நிற குறியீட்டை வரைந்திருப்போம். இவற்றை வைத்துக் கொண்டே திட்டமிட்டுத் தாக்குதல்களை மேற்கொண்டார்கள் சிங்களப்படைகள். என்னைப் பொறுத்தவரை நாம் அமைவிடத்தை அடையாளப்படுத்திய பின்னரே அதிகமாக தாக்குதலை நடத்தினார்கள்.

நான் இரணைப்பாலையில் என் மருத்துவ மனையை நிறுவி ஒரு வாரமாக மக்களுக்கான சிகிச்சையை வழங்கி வந்த போது அங்கே இருந்த தற்காலிக கொட்டகைகளில் நோயாளர்களை படுக்க வைத்திருந்தேன். அந்த ஒரு வாரமும் எந்தத் தாக்குதல்களும் நடைபெறவில்லை. ஆனால் ஒரு வாரம் கழித்து மருத்துவமனையின் நிலையை அறிவித்து 3 ஆவது நாள் என் பொறுப்பில் இருந்த அம் மருத்துவமனைக்கும் தாக்குதல் நடத்தப்பட்டது. உண்மையில் அதன் அமைவிடத்தைக் கொடுத்தது மட்டும்தான் இத் தாக்குதலுக்கு காரணமாக இருக்கும்.

அது மட்டுமல்ல மாத்தளனில் இருந்த மருத்துவமனைக்கு நேரடியாக உந்துகணையால் (RPG ) தாக்குதல் நடத்தப்பட்டது. இவ்வாறாக அடையாளப்படுத்தப்பட்ட பின்பே மருத்துவமனைகள் அதிகமாகத் தாக்கப்பட்டன. அதுவும் சிங்கள அரசினால் உயர் பாதுகாப்பு வலயம் என்று அறிவிக்கப்பட்ட இடங்களில் அதிகமாக நடந்தது. இது இறுதி முள்ளிவாய்க்கால் வரை தொடர்ந்தது.

**உயர் பாதுகாப்பு வலயங்கள் என அறிவிக்கப்பட்ட இடங்களில் தாக்குதல் நடத்தப்பட்ட போது மக்களின் நிலை?**

இலங்கை அரசு உயர் பாதுகாப்பு வலயம் *1,2,3,4* என படிப்படியாக குறிப்பிட்ட பிரதேசங்களை அறிவிக்கிறது. அதனால் அப் பிரதேசங்களை நோக்கி மக்கள் நகர்ந்து சென்றார்கள். அதற்குள் தாக்குதல் நடக்காது என்று நம்பிச் சென்ற மக்கள் மீது சரமாரியான தாக்குதலை செய்து மக்களை கொன்று குவித்தார்கள் சிங்களப்படைகள். ஒவ்வொரு பாதுகாப்பு வலயங்களும் முழுமையாக தாக்கி அழிக்கப்பட்டது. குடும்பம் குடும்பமாக மக்கள் செத்துக் கொண்டிருந்த கொடுமையை அரங்கேற்றி இருந்தது சிங்கள அரசு.

உயர்பாதுகாப்பு வலயம் 1 என்று அறிவிக்கப்பட்ட உடையார்கட்டு பிரதேசத்தை இலக்கு வைத்து பாதுகாப்பு வலயம் என்று அறிவித்த மறுநாளே தாக்குதலை செய்தார்கள். அப்போது உடையார்கட்டு மகா வித்தியாலயத்தில் மல்லாவி மருத்துவமனை இயங்கிக் கொண்டிருந்தது. அம் மருத்துவமனையை குறி வைத்து பெரும் தாக்குதல் ஒன்றை ஒருங்கிணைத்தது சிங்களப்படைகள். உடையார்கட்டுச் சந்தியில் இருந்து புதுக்குடியிருப்பு நோக்கி செல்லும் வீதியில் ஒரு கிலோமீற்றர் தூரத்துக்குள் 104 ( சரியான தொகை நினைவில்லை) மக்களை கொன்று குவித்தது. பாதுகாப்பு வலயத்துக்குள் பாதுகாப்புத் தேடி போன மக்கள் கொன்று குவிக்கப்பட்டார்கள்.

இதனால் மக்கள் அங்கிருந்து வெளியேற முயன்றார்கள். அப்படியாக வெளியேறிச் சென்று கொண்டிருந்த மக்களை சாகடிக்கும் திட்டமிட்ட தாக்குதலை தேவிபுரம் பகுதியில் வைத்து செய்கிறது சிங்களப்படை. அப்போது 20 பேருக்கு மேலான மக்கள் அந்த இடத்திலேயே சாவடைந்தார்கள். காயமடைந்தவர்களை நான் முதலுதவி செய்து மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைத்தேன். இறந்த உடல்களில் பொறுப்பெடுக்கப்படாத வெற்றுடல்களை தென்னை மரங்களுக்கு கீழே பசளை போடுவதற்காக வெட்டப்பட்ட கிடங்குகளில் போட்டு அடக்கம் செய்தேன். அதைப் போல பல சம்பவங்கள் உயர்பாதுகாப்பு வலயங்களில் நடந்தது.

இந்த இடத்தில் நான் ஒன்றை கூற வேண்டும். இவ்வாறு மக்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதல்களை சிங்களம் செய்து கொண்டிருந்த போது நாம் எவ்வாறு நடந்து கொண்டோம் என்பதை இவ்வுலகம் உணர வேண்டும்.

இறுதி நாட்களில் தென்தமிழீழத்தில் இருந்த போராளிகள் ஒரு விடயத்துக்காக தலைவரிடம் அனுமதி கேட்டிருந்தார்கள். அதாவது தென் இலங்கை பகுதிகளில் வாழும் சிங்கள மக்கள் மீது தாக்குதல் நடாத்தினால், எம்மக்கள் மீதான தாக்குதலை எதிரி கொஞ்சமாவது குறைக்க முனைவான் என்றும் அதனூடன திருப்பு முனையுடன் கூடிய கால அவகாசம் ஒன்று எமக்கு வேறு தயார்படுத்தல்களுக்குக் கிடைக்கும் என்றும், அதே நேரம் தென்னிலங்கையில் சிங்கள மக்கள் போரை நிறுத்தச் சொல்லி அரசுக்கு அழுத்தத்தையும் கொடுப்பார்கள் என்றும் அவர்கள் தெரிவித்து சிங்கள மக்கள் மீது தாக்குதல் நடத்த அனுமதி கேட்டார்கள்.

தலைவரோ எம் விடுதலை அமைப்பின் போரியல் நெறிக்கு அமைவாக எதிரிகளுடன் மட்டும் சண்டை இடுங்கள். சிங்கள வல்லாதிக்க அரசுடன் அல்லது சிங்கள படைகளுடன் மட்டும் சண்டையிடுங்கள். நிராயுதபாணிகளாக இருக்கும் அப்பாவி சிங்கள மக்கள் மீது ஒரு சிறு காயத்தையும் ஏற்படுத்தும் தாக்குதல்களைக் கூட நடத்த வேண்டாம் என்று பணித்தார். இவ்வாறுதான் எம் தலைவர் மக்களுக்கான போராட்டத்தை முன்னெடுத்தார். சிங்கள அரசைப் போல கொடூர முகம் கொண்டு அப்பாவி மக்களை கொன்றொழிக்கவில்லை. அதே வேளை எம் பராமரிப்பில் எத்தனை சிங்களப் படை வீரர்கள் இருந்தார்கள்? அவர்களை எவ்வாறு நாம் பராமரித்தோம் என்பதை இச்சிங்கள அரசு அறியாது.

**(அடுத்தவாரமும் வரும்)**



## கற்தொட்டி

முன்னைய காலங்களில் நீரை சேமிப்பதற்கும், ஏனைய உயிர்களின் தாகம் தீர்க்கவும் கல் தொட்டிகளைப் பயன்படுத்தினர்.

இப்போதிருக்கும் சிமெந்து என்ற வரப்பிரசாதத்தால், இந்த வேலைகள் இலகுவாகி விட்டன. ஆனால், முன்னைய காலங்களில் அவ்வாறில்லை. ஆனாலும் அன்றைய நாளில், எமது முன்னோர்கள் பெரிய கற்களைச் சிறப்பாகச் செதுக்கி தொட்டிகளாக்கினர்.

விவசாயத் தேவைகளுக்கென பெரிய கற்தொட்டிகளையும், கால்நடைகளின் தாகத்தைப் போக்க சிறிய கற்தொட்டிகளையும் செதுக்கினர். இந்தத் தொட்டிகள் இன்று அருகிவிட்டபோதும், சிலர் பேணி வருகின்றனர்.



## தத்தை விடு தூது

தமிழில் எழுந்த சிற்றிலக்கிய வகைகளுள் தூது வகை செய்யுள்ளகளும் ஒன்று. தத்தை விடு தூது என்ற இந்நூல் திருகோணமலையைச் சேர்ந்த தி.த.சரவணமுத்துப்பிள்ளை என்பவரால் 1892 ஆம் ஆண்டு இயற்றப்பட்டது.

இந்த நூல் பாரதியாரின் பெண் விடுதலைப் பாடல்களை மூலமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது என அறிஞர்கள் கருதுவர்.

காதலில் தோல்வியுற்ற தலைவனின் மன உணர்வுகளை வெளிப்படுத்துவதாகவும் காதலின் ஆழம், ஏக்கம், பாசம், ஏமாற்றம் என்பவற்றை தத்தைக்கு (கிளிக்கு) கூறுவதாக அமைக்கப்பட்டுள்ளது.

இந்நூலில் ஒருபகுதி இலங்கை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் பாட நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.



## ஊறணி ஊற்று

பொலிகண்டி ஊறணி வைத்தியசாலைக்கு வடக்கே கடலுடன் இணைந்து காணப்படுகின்றது ஊறணி ஊற்று.

முன்னர் மழை காலத்தில் ஊற்றிலிருந்து தண்ணீர் சீறிப்பாய்ந்து கொண்டிருக்கும் காட்சி மிகவும் அற்புதமானது எனவும் இந்நீர் மருத்துவகுணம் நிறைந்ததாகவும் சிரங்கு, வாதம் போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் இங்கு வந்து நீராடிச் செல்வர் என்றும் இப்பகுதியிலுள்ள முதியோர் குறிப்பிடுகின்றனர்.

காலவோட்டத்தில் இந்த ஊற்று மக்களால் கைவிடப்பட்டு விட்டது. ஆனாலும் சிலர் இதை மீளமைக்க அரச உதவியுடன் முயற்சிகளை எடுத்து வருகின்றனர்.



## கறுத்தக் கொழும்பான்

கறுத்தக் கொழும்பான் என்ற பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே பலருக்கும் வாயூறும். அதன் சுவை தித்திக்கும். வடக்கின் - யாழ்ப்பாண மண்ணின் புகழ் பரப்பியவற்றுள் கறுத்தக் கொழும்பான் மாம்பழத்துக்கு தனி இடம் உண்டு.

இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சி பாரம்பரிய மரங்களையும் விட்டு வைக்கவில்லை. இதனால் நமது பாரம்பரிய மரமான கறுத்தக் கொழும்பான் பெரும்பாலான இளந்தலைமுறைகள் அறியாதவையாகி வருகிறது.

புலம்பெயர்ந்து பிற தேசங்களில் வாழ்ந்தாலும் கறுத்தக் கொழும்பான் தந்த சுவையை மறக்க மாட்டாத நம் மக்கள், இன்று புலம்பெயர் தேசங்களிலும் கறுத்தக் கொழும்பான் மரத்தைப் பரவச் செய்துள்ளனர்.

வீட்டுக்கு வரும் விருந்தினர்களுக்கு கறுத்தக் கொழும்பான் மாம்பழத்தை சுவைக்கக் கொடுக்கும் வழக்கம் முன்னர் தவறாமல் இருந்தது. இந்த மாம்பழத்தை பழமாக மட்டும் உண்ணாமல், காலை அல்லது இரவு உணவாக புட்டு, பாண் உண்ணும்போது அதனுடன் சேர்த்து சாப்பிடும் பழக்கமும் இருந்தது. இன்று இது சற்று அருகி விட்டது.

## பிள்ளை

யாழ்ப்பாணத்து மரபில் பெற்றோர் தங்கள் மக்களை பிள்ளை என அழைக்கின்றனர். இவ்வாறு அழைக்கும்போது ஆண், பெண் என்ற வேறுபாடு பார்க்கப்படுவதில்லை.

சிலவேளைகளில், ஆணை "ஆம்பிளைப் பிள்ளை" என்றும் பெண்ணை "பொம்பிளைப் பிள்ளை" என்றும் அழைக்கின்றனர். இது உறவுச் சொற்களாகக் கூறப்படும்போது, ஆண்பிள்ளையை மகன் என்றும், பெண் பிள்ளையை மகள் என்றும் கூறுவர்.

பிள்ளை என அழைக்கும் பழக்கம் தற்போதைய இளம் தலைமுறையிடம் இல்லை என்றபோதும், நம்மிடம் வாழும் தலைமுறையிடம் இப்போதும் உள்ளது.

### முதுசொம் மீட்போம்



# வாரபலன்

## மேடம்
பெயரும் புகழும் அதிகரிக்கும். உடல் ஆரோக்கியம் பலப்படும். மருத்துவச் செலவுகள் குறையும். பிறருக்கு உங்களால் ஆன உதவிகளைச் செய்வீர்கள். குடும்பத்தில் அமைதி நிலவும். வீண் அலைச்சல்கள் குறையும். உத்தியோகஸ்தர்களுக்கு வேலைச்சுமை குறையும்.

## ரிஷபம்
திட்டமிட்ட காரியங்களில் படிப்படியான வெற்றிகளை அடைவீர்கள். சுபச் செலவுகளைச் செய்து மகிழ்வீர்கள். வழக்குகளில் எதிர்பார்த்த முடிவு கிடைக்கும். தைரியமும் தன்னம்பிக்கையும் கூடும். மனவளத்தை பெருக்கிக்கொள்ள யோகா, பிராணாயாமம் செய்யுங்கள்.

## மிதுனம்
பொருளாதார நிலைமை நன்றாக இருக்கும். எடுத்த காரியங்கள் யாவும் வெற்றியடையும். திட்டமிட்ட வேலைகளை கவனத்துடன் செய்து முடிப்பீர்கள். செயல்களை குறுக்கு வழியில் செய்ய வேண்டாம். உத்தியோகஸ்தர்கள் வேலைப்பளு அதிகரிப்பதால் அதிகமாக உழைக்க வேண்டியிருக்கும்.

## கடகம்
தெய்வ அனுகூலம் ஏற்படும். பொருளாதாரத்தில் சுமாரான முன்னேற்றம் தென்படும். வீடு வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் குதூகலமும் நிறைந்திருக்கும். உடன்பிறந்தோரால் நன்மையடைவீர்கள்.

## சிம்மம்
பொருளாதார நிலைமை சுமாராக இருக்கும். செயல்கள் செய்யும்போது எதிர்பாராத குழப்பங்களும் வரும். இறைவழிபாடு நல்லது. மலை போல் வரும் துன்பங்கள் பனி போல் விலகிவிடும். பெண்கள் கணவரிடம் விட்டுக்கொடுத்து நடந்து கொள்ளவும்.

## கன்னி
பொருளாதாரத்தில் வளர்ச்சி ஏற்பட்டு பழைய கடன்களை அடைப்பீர்கள். தொழிலிலும் நல்ல முன்னேற்றம் தென்படும். சோம்பிக் கிடந்த காரி யங்கள் அனைத்தும் சுறுசுறுப்பாக நடைபெறும். உடல் ஆரோக்கியம் பலப்படும்.

## துலாம்
குடும்பத்தில் மகிழ்ச்சி நிறையும். உங்களின் நெடு நாளைய எண்ணங்கள் ஈடேறும். கடினமான உழைப்பிற்குப் பிறகே வெற்றி உங்களைத் தேடி வரும். உத்தியோகஸ்தர்களுக்கு கோரிக்கைகள் சிரமமின்றி நிறைவேறும். வியாபாரிகளைத் தேடி பலவகையிலும் லாபம் வரும்.

## விருச்சிகம்
பெரிய திருப்பங்கள் எதையும் நீங்கள் எதிர்பார்க்க முடியாது. பணவரவு சீராக இருக்கும். சிலருக்கு வாகனங்கள் வாங்கும் யோகம் ஏற்படும். உறவினர்களிடம் பொறுப்புடனும் பொறுமையுடனும் நடந்து கொள்ளவும். உத்தியோகஸ்தர்களுக்கு வேலையில் பளு அதிகரிக்கும்.

## தனுசு
குடும்பத்தில் ஒற்றுமை மேலோங்கும். உறவினர்கள் வந்து சேர்ந்து கொள்வார்கள். சிலருக்கு நீண்ட நாள்களாக இருந்து வந்த உபாதைகள் நீங்கும். செல்வமும் செல்வாக்கும் உயரும். சொத்துப் பிரச்சினைகளில் இடையூறுகள் நீங்கும்.

## மகரம்
உங்கள் முயற்சிகள் வெற்றி பெறும். சமூகத்தில் மதிப்பு மரியாதை உயரும். உறவினர்களின் மனக்கசப்புக்கு ஆளாக நேரிடும். தினமும் சிறிது நேரம் தியானம் செய்வது நலம். உத்தியோகஸ்தர்களுக்கு வேலைச்சுமை அதிகரிக்கும்.

## கும்பம்
குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். பொருளாதாரநிலையில் முன்னேற்றம் உண்டாகும். திட்டமிட்ட செயல்களில் வெற்றிவாகை சூடுவீர்கள். எல்லோருக்கும் உதவிகள் செய்து பெருமையடைவீர்கள். பிறருடன் பேசும் நேரத்தில் எச்சரிக்கை தேவை.

## மீனம்
உங்கள் பேச்சுக்கு மதிப்பு மரியாதை அதிகரிக்கும். உறவினர்களின் ஆதரவும் பயணங்களில் லாபமும் உண்டு. உடன்பிறந்தோர் அனுகூலம் உண்டு. எதிர்பாராத வகையில் பொருள் சேரும். தன்னம்பிக்கைப் பலப்படும்.




உயிர்த்த ஞாயிறு அன்று நடத்தப்பட்ட குண்டு வெடிப்புச் சம்பவத்தில் பலியானவர்களுக்காக திருப்பலி, ஆத்மா சாந்திப் பூசை என்பன நடத்தப்படவுள்ளதாக தமிழர் ஒன்றியத்தின் தலைவரும் சட்டத்தரணியுமான த.சிவநாதன் தெரிவித்துள்ளார்.



ஏழாலை அத்தியடி விநாயகர் திருக்கோயில் (ஏழு கோயில்) பெருந்திருவிழாவில் கடந்த 18.05.2019 திகதி இரதோற்சவம் இடம்பெற்ற போது விநாயகப் பெருமான் தேரில் ஆரோகணித்து வருவதைப் படத்தில் காணலாம்.



முன்னாள் யாழ். மாநகர முதல்வர் திருமதி சரோஜினி யோகேஸ்வரன் அவர்களின் 21 ஆண்டு நினைவு 17.05.2019 வெள்ளிக்கிழமை தமிழர் விடுலைக் கூட்டணித் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்றது.



தமிழினத்தின் வரலாறு உரிய சான்றுகளுடன் பேணப்படுவதற்பகாகச் சுவிற்சலார்ந்து பேர்ண் நகரில் ஒரு தமிழ் ஆவணக் காப்பகமும் நூல்நிலையமும் திறந்து வைக்கப்பட்டது



தமிழர்கள் செறிந்து வாழும் பிரான்ஸ் நகரிலும் முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வு கொண்டாடப்பட்டது.



கிழக்கு ஆளுநர் ஹிஸ்புல்லாவுக்கு எதிராக தமிழர் அமைப்பின் ஏற்பாட்டில் முற்போக்குத் தமிழர்அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வியாழேந்திரன் தலைமையில் அமைதியான ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

# ஆந்தைகளின் மொழி

அக்பர் பீர்பால் கதைகள்

(சென்றவாரத் தொடர்ச்சி)

"தங்கள் கட்டளைப் படி நடக்க சித்தமாக இருக்கிறேன்" என்று பணிவுடன் பீர்பல் பதிலளித்தார். "பீர்பால்! நீ உடனிருந்தால் களைப்பே தெரிவதில்லை. நாவில் உனக்கு இத்தனை வலிமையைக் கொடுத்த இறைவன், உடலிலும் கொடுத்து இருக்கிறாரா என்பதையும் அறிய ஆசைப்படுகிறேன்" என்றார். "ஆகட்டும் பிரபு!" என்றார் பீர்பால்.

சற்று நேரத்திற்குப்பின், அக்பர் ஒரு பெரிய படை வீரர்களின் அணியுடன் காட்டை நோக்கிப் புறப்பட்டார். பீர்பாலும் அக்பருடன் சென்றார். காட்டினுள் நுழைந்தபிறகு, அக்பரின் வீரர்கள் தாரை, தப்பட்டை ஆகியவற்றை உரக்க ஒலித்துக் காடே அதிரச் செய்தனர். அந்த சத்தத்தைக் கேட்டு காட்டு மிருகங்கள் மிரண்டு அங்குமிங்கும் சிதறி ஓட, அக்பரும், மற்றவர்களும் அவற்றைத் துரத்திச் சென்று, கொன்று குவித்தனர்.

திடீரென ஒரு புலி புதரிலிருந்து சீறிப் பாய்ந்து அவர்களை நோக்கி வந்தது. தாரை, தப்பட்டைகளின் ஒலியினால் எரிச்சல் அடைந்த புலி அவர்கள் மீது பாய முனைந்த போது, அக்பர் தன் கையில் இருந்த ஈட்டியை அதன்மீது எறிய, பயங்கரமாக உறுமிக் கொண்டே புலி மண்ணில் சாய்ந்தது. புலி இறந்து விட்டதால் அக்பர் உற்சாகமுற்றுக் கையை உயர்த்திக் கூச்சலிட,



சுற்றியிருந்த வீரர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

மாலைக்குள் அக்பர் மற்றொரு புலியையும் வீரத்துடன் வேட்டையாடிக் கொன்றார். பிறகு அனைவரும் சென்று ஓய்வு எடுக்க, அக்பர் தனியாக அமர்ந்து பீர்பாலுடன் உரையாடிக் கொண்டிருந்தார்.

மாலை மங்கிய நேரம்! பகல் முழுவதும் வானில் பறந்து திரிந்து கொண்டிருந்த பறவைகள் தங்கள் கூடுகளுக்குத் திரும்பிக் கொண்டு இருந்தன. அவற்றின் இனிமையான குரல்களை இருவரும் கேட்டு ரசித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் அமர்ந்துஇருந்த இடத்திற்கு அருகில் இருந்த ஒரு மரத்தில் இரு ஆந்தைகள் பறந்து வந்து உட்கார்ந்து ஒலியெழுப்பத் தொடங்கின.....

(அடுத்த வாரம் நிறைவுபெறும்)

# அறிவோம் உயர்வோம்

## உங்கள் கணனிகள்



கணனி என்பது ஒரு இலத்திரனியல் சாதனமாகும். இது தரவுகளை ஒரு செய்முறைக்கு உட்படுத்தி, அதிலிருந்து பயனுள்ள தகவல்களைத் தருகின்ற சாதனமாகும். அத்துடன் Programகளை கட்டுப்பத்துகின்ற, சேமிக்கின்ற செயற்பாடுகளையும் செய்கின்றது. ஒரு கணனிக்கே உரித்தான இயல்புகள் இவைதான்.

1. வேகம் (Speed)
2. திருத்தம் (Accuracy)
3. நம்பகத்தன்மை (Reliability)
4. சேமித்தல் தகைமை (Storage Capablity)
5. தொடுகையின்றிய நன்மைகள் (Intangible Benefits)
6. குறைந்த கட்டணம் (Reduced Cost)
7. இணையம் (Internet)

# ஒரு குறள் மூவர் விளக்கம்



**குறள் 77:**

**என்பி லதனை வெயில்போலக் காயுமே**

**அன்பி லதனை அறம்**

**கலைஞர் மு.கருணாநிதி உரை:**

அறம் எதுவென அறிந்தும் அதனைக் கடைப்பிடிக்காத வரை, அவரது மனச்சாட்சியே வாட்டி வதைக்கும். அது வெயிலின் வெம்மை புழுவை வாட்டுவதுபோல இருக்கும்.

**மு.வரதராசனார் உரை:**

எலும்பு இல்லாத உடம்போடு வாழும் புழுவை வெயில் காய்ந்து வருத்துவது போல் அன்பு இல்லாத உயிரை அறம் வருத்தும்.

**சாலமன் பாப்பையா உரை:**

எலும்பு இல்லாத புழுவை வெயில் காய்ந்து கொள்வது போல அன்பு இல்லாத உயிரை அறக்கடவுள் காய்ந்து கொல்லும்.

# விடுகதையாம் விடுகதை...

1. உணவை எடுப்பான் ஆனால் உண்ண மாட்டான் அவன் யார்?
2. காலில் தண்ணீர் குடிப்பான். தலையில் முட்டையிடுவான். அவன் யார்?
3. நடந்தவன் நின்றான். கத்தியால் தலையைச் சீவினேன். மறுபடியும் நடந்தவன் யார்?
4. ஓடையில் ஓடாத நீர். ஒருவரும் குடிக்காத நீர். அது என்ன?
5. வீட்டுக்கு வந்த விருந்தாளியை வரவேற்க ஆளில்லை .யார் அது?

1. அகப்பை 2. தென்னை 3. பென்சில்
4. கண்ணீர் 5. செருப்பு





# கேள்விக்கென்ன பதில்?

1. மஞ்சள் நாகரீகம் என்பது எதைக் குறிக்கின்றது?
2. கிரேக்க நாகரீகம் பற்றி அறிய உதவும் நூல்கள் எவை?
3. நாடுகளே இல்லாத கண்டம் எது? அண்டார்டிக்கா
4. அன்னை தெரசா பிறந்த நாடு எது?.
5. இந்திய துணைக்கண்டத்தின் மிகச் சிறிய நாடு எது?




**பதில்கள்**

1. சீன நாகரீகம்
2. இலியட், ஒடிஸி
3. அண்டார்டிக்கா
4. மசிடோனியா
5.பூடான்

# ஆங்கிலம் கற்போம்

## வினைச்சொல் வடிவங்கள்




3. "Third Person Form" என்பது சாதாரண நிகழ்காலத்தின் மூன்றாம் நபர் ஒருமை வினைச்சொற்களாகப் பயன்படுபவைகள் ஆகும். அதாவது "Base Form" cld; "s, es" போன்ற எழுத்துக்கள் இணைந்து பயன்படுபவை. எடுத்துக்காட்டாக:

do - does go - goes speak - speaks

4. "Past Form" என்பது ஆங்கிலத்தின் இறந்தக்கால வடிவமாக பயன்படும் வினைச்சொற்களாகும். இதில் ஒழுங்கு வினைகள் (Regular Verbs), ஒழுங்கமையா வினைகள் (Irregular Verbs) என இரண்டு வகைகள் உள்ளன. ஒழுங்கு வினைகளின் போது "நன" இணைந்து பயன்படும். எடுத்துக்காட்டாக:

play - played allow - allowed boil - boiled

அதேவேளை ஒழுங்கமையா வினைகளின் (Irregular Verbs) போது, சொற்கள் வடிவம் ஒழுங்குமுறையின்றி காணப்படும் அதனாலேயே அவை ஒழுங்கமையா வினைச்சொற்கள் என்றழைக்கப்படுகின்றன.எடுத்துக்காட்டாக:

go - went do - did buy - bought

5. "Past Participle Form" ,JTk; Past Form போன்றே ஒழுங்கு வினைகளாக (Regular Verbs) உள்ளவைகளும் உள்ளன் ஒழுங்கமையா வினைகளாக உள்ளவைகளும் உள்ளன. இவற்றையும் நீங்கள் அட்டவணை (Irregular Verbs) இல் பார்த்து பயிற்சி செய்துக்கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக:

go - gone do - done eat - eaten இவ்வாறு ஆங்கிலத்தில் மொத்தம் ஐந்து வினைச்சொல் வடிவங்கள் உள்ளன.

அடுத்த வாரம் தொடர்வோம்....



# ஏதிலிகள்

பா.சின்னத்துரை

**நான்** புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளி. ஏதிலிகள் பற்றி இந்தப் பதிவை மேற்கொள்ளலாம் என நினைக்கின்றேன். இலங்கையில் அண்மையில் நடத்தப்பட்ட பேரவலத்தின் பின், ஏற்பட்டிருக்கும் ஒரு சுமுகமற்ற சூழ்நிலையில் இலங்கையில் தங்கியிருக்கும் சிரியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்து வந்த 700 மேற்பட்ட ஏதிலிகளின் நிலை பற்றிய கருத்தாகும்.

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் தங்கியிருந்த இந்த ஏதிலிகளில் சிலரை வவுனியாவில் உள்ள ஒரு முகாமில் தங்க வைப்பதற்காக அரசாங்கம் எடுத்துள்ள முடிவினை இங்குள்ள சில தமிழ் அரசியல்வாதிகளும் சமூக அமைப்பினரும் எதிர்ப்பது மிகவும் கேலிக்குரிய விடயமாகும். அதாவது தமிழர்களாகிய நாம் இன்னும் ஏதிலிகள் என்ற நிலையில் இருந்து மாறவில்லை. சொந்த நாட்டிலேயே இப்போதும் நாம் ஏதிலிகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். கேப்பாபிலவு மக்கள் சொந்த இடங்களிலேயே குடியேற வேண்டும் என்று வருடக்கணக்காக போராடுகிறார்கள்.

சொந்த நாட்டிலேயே சொந்த வீட்டையும், ஊரையும் விட்டு வெளியேறி பல வருடங்களாகிய நிலையில், பிறந்த மண்ணில் வாழ்வதற்கு ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். 30 வருட யுத்தத்தில் நாம் எத்தனை ஆயிரம் பேர், எத்தனை இலட்சம் பேர் தாய் நாட்டை விட்டு ஓடி இன்று உலகம் எல்லாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இன்று உலகத்திலேயே தமிழன் இல்லாத நாடு எதுவும் இல்லை என்று சொல்லும் அளவுக்கு தமிழர்களாகிய நாம் ஏதிலிகளாக எல்லா நாடுகளிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

சொந்த நாட்டிலேயே நாம் பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டு சந்தேகக் கண்கொண்டு பார்க்கப்பட்ட போது, உடைமைகள் அனைத்தையும் விட்டுவிட்டு உயிரை மட்டும் பிடித்துக் கொண்டு எந்த நாடு எங்களை ஏற்றுக் கொள்கின்றதோ அந்த நாட்டிற்கு ஓடினோம். அந்த நாடுகளில் எல்லாம் எம்மை பயங்கரவாதிகள் என்று ஒதுக்கி விடாமல், நம்மையும் மனிதர்களாக ஏற்றுக் கொண்டு, எமக்கான மருத்துவம், கல்வி, வாழ்விடம், வாழும் உரிமை அனைத்தையுமே தந்தது. இருந்தபோதும் நாம் இன்னும் ஏதிலிகளாக ஓடுவதை விட்டுவிடவில்லை.

யுத்தம் எம்மை ஏதிலிகளாக்கியது போல் நாமும் சிலரை ஏதிலிகளாக்கினோம் என்பதை எந்தத் தமிழனும் மறந்துவிடக்கூடாது. அப்போது அந்த மக்கள் எப்படி வேதனைப்பட்டிருப்பார்கள்? அவர்களையும் சிலர் அரவணைத்து, ஆறுதல் கூறி வாழ வைத்தார்களே...! இதை நாம் எப்படி மறப்பது? நம்மையும் பயங்கரவாதிகள், குழப்பக்காரர்கள் என்று நாம் போன நாட்டு மக்களும் விரட்டி அடிக்கத் தொடங்கியிருந்தால் நமது நிலை எப்படி இருந்திருக்கும்? யுத்தம் முடிந்து முள்ளிவாய்க்கால் பேரவலம் முடிவுற்று, அந்த இரத்தக் கறை காயாத சிறிது காலத்திலேயே வேற்று நாட்டு ஏதிலிகள் எங்கள் பகுதிகளில் தங்குவதற்கு இடமளிக்கக்கூடாது என்று சொல்வதற்கு தமிழர்களாகிய நமக்கு என்ன அருகதை இருக்கிறது.

தமிழர்களாகிய எமக்கென்று ஒரு பண்பு இருக்கின்றது. விருந்தோம்பல், உறவாடல், ஆபத்துக்கு உதவி செய்தல் என்று பல பண்புகள் மரபுரீதியாக உள்ளது. இந்த வகையில்தான் சித்திரை 21 ஆம் திகதி முஸ்லிம் பயங்கரவாதிகளால் குண்டுவெடிப்பு நடந்த மறுகணமே, அங்கு ஓடிச் சென்று உதவிகள் செய்தோம். போதும் போதுமெனும் அளவுக்கு இரத்ததானம் செய்தோம். இதையெல்லாம் தமிழரின் இரத்தத்தோடு ஊறிப் போன பண்புகள்.

இப்படிப்பட்ட நாம், எப்படி வேறு நாட்டு ஏதிலிகளை எங்கள் பகுதியில் தங்க



வைக்கக்கூடாது என்று சொல்வது? எந்த நாட்டு ஏதிலிகளானாலும் எல்லோரையும் அரவணைத்துச் செல்ல வேண்டியது ஈழத் தமிழர்களாகிய நமது தார்மீகக் கடமை என்றே நான் கருதுகின்றேன். உணவும் பாதுகாப்பும் கொடுக்க அவர்கள் இருக்கும்போது, நாம் ஏன் இதைத் தடுக்க வேண்டும்? நமக்கு முன்பு ஏற்பட்ட நிலை இனியும் ஏற்படதா? என்ற எண்ணக்கருவினைக் கருத்தில் கொண்டு நாம் செயற்பட வேண்டும்.

குறுகிய அரசியல் இலாபங்களையும், பிரதேச வாதங்களையும் விட்டுவிட்டு மனித நேயத்தோடு நாம் ஒவ்வொருவரும் அணுக வேண்டும் என்பது ஒவ்வொரு தமிழனின் கடமையாகும்.

---

## தசாப்தத்தின்....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

முகநூல்களில் பதிவிடுவோர் குறிப்பாக இதனைக் கருத்தில் கொள்ளுங்கள். இறுதி யுத்தம் முடியும் வரை அரசுடன் இணைந்து செயற்பட்ட கட்சிகள் , குழுக்களை விடவா முஸ்லிம்கள் தவறு செய்தனர். அந்தத் தமிழர்களுக்குத்தான் எமது பலம், பலவீனம் தெரிந்திருந்தது. அதன் அடிப்படையில்தான் படையினரின் நீரோடி எனும் நடவடிக்கை அமைந்திருந்தது.

முஸ்லிம் மாவீரர்களுடன் இணைந்து போராடிய போராளிகள் இன்னமும் உயிருடன் உள்ளனர். முஸ்லிம்களால் காப்பாற்றப்பட்ட அவர்களின் இல்லங்களில் சாப்பிட்ட நினைவுகளை அவர்கள் மறந்துவிடவில்லை. 2009 இறுதி யுத்தத்தின் பின்னர், ஏற்கனவே போராட்டத்துக்கு உதவிய குற்றத்துக்காக கைது செய்யப்பட்ட முஸ்லிம்களின் குடும்பங்கள் படும் துயரம் சொல்லி மாளாது. போராட்டத்தின் திடீர் விசுவாசிகளாக உருவானோர் முஸ்லிம்களைக் கொச்சைப்படுத்துவது வேதனையளிக்கிறது. 'முள்ளிவாய்க்காலுக்குப் போனேன் அழவில்லை" என்று ஒரு முஸ்லிம் சொன்னதற்காக இப்படி ஒரு நிலைப்பாடா? முதல் அடியை ஒருவர் வைக்கிறார் என்றால் அடுத்த அடியை சுயமாக அவர் வைக்க நாம் தடையாக இருக்கக்கூடாது. மனதளவில் எல்லாமே சுயமாக நடைபெறட்டும்.

# கழுதைப்புலி ஆண் என்றாலே கஷ்டம்தான்...!

முள் மீதும் கல் மீதும் விழுந்து காயப்படாதவன் பூக்களைப் பார்ப்பதற்குக்கூடத் தகுதியற்றவன். எதிரி பலசாலியோ, திறமைசாலியோ வெற்றியோ தோல்வியோ கடைசி வரை போராட வேண்டும் என்கிற விதியின் கீழ் வாழ்கிற உயிரினங்களில் ஒன்று கழுதைப்புலி.

“இங்க சிங்கம் நிம்மதியா வாழணும் எண்டாலும் நான்தான் முடிவு பண்ணணும். சிறுத்தை நிம்மதியா வாழணும் எண்டாலும் நான்தான் முடிவு பண்ணணும்” என்கிற அளவுக்கு மற்ற விலங்குகளுக்குச் சிம்மசொப்பனமாக இருப்பவை கழுதைப்புலிகள்.

வேட்டையாடும் விடயத்தில் சூழ்ச்சியை மட்டுமே நம்பி காய் நகர்த்துகிற கழுதைப் புலிகளின் உயிர்பிழைப்புக் கதைகள் பலரும் அறியாதது.

60 இலிருந்து 80 வரை இருக்கிற கழுதைப்புலிகள் கூட்டத்தில் பெண்தான் எல்லாமே. பெண்ணைத் தவிர்த்து ஆண் கழுதைப்புலிகளால் எந்த ஒரு விஷயத்தையும் முன் எடுக்கவே முடியாது. பெண் கழுதைப்புலிதான் தலைவியாக இருக்கும். ஆண் கழுதைப்புலிகளுக்கும் பெண் கழுதைப்புலிகளுக்கும் உடலளவில் எந்த வேறுபாடுகளும் கிடையாது. ஆண் கழுதைப்புலிகளுக்கு இருப்பதைப் போன்ற ஆண் குறி பெண் கழுதைப்புலிகளுக்கும் உண்டு. இதற்குப் போலி ஆண் குறி என்று பெயர். ‘சூடோபெனிஸ்’ (Pseudopenis) என்று சொல்லுவார்கள். உடலோடு ஒட்டியிருக்க வேண்டிய பெண்குறி, ஹோர்மோன் கோளாறால், சில இன்ச் நீளத்துக்கு வெளியே நீண்டு காட்சி தரும். பெண் தன்னுடைய குட்டிகளைப் போலி ஆண் குறி வாயிலாகத்தான் பிரசவிக்க முடியும். பிறப்புதான் ஒவ்வொரு உயிரின் உயிரிபிழைப்பிலும் முக்கியமான பகுதி. ஆனால், அது அவ்வளவு சாதாரண விஷயமல்ல. சம்பந்தப்பட்ட இரண்டு உயிர்களுக்கும் அது இரண்டாம் ஜனனம்தான்.

கழுதைப்புலியின் 23 இன்ச் அளவுக்கு விரிவடைகின்ற போலியான ஆணுறுப்பில் 2 கிலோ எடை கொண்ட குட்டியை பிரசவிப்பது மனித இனம் நினைத்துப் பார்க்க முடியாத துயரம். ஆனாலும், பிரசவ காலம் முடிந்தால் பெற்றெடுத்துத்தானே ஆக வேண்டும். இந்தத் தருணத்தில் இரண்டு பேரில் ஒருவருடைய உயிருக்கு ஆபத்து ஏற்படலாம். முதல் குட்டியைப் பிரசவிக்கும் பெண் கழுதைப்புலிகளில் 15 வீதமானவை இறந்து விடுகின்றன என்கிறது ஓர் ஆய்வு. சில குட்டிகள் பிறக்கும்போது மூச்சுத் திணறல் ஏற்பட்டு இறந்து விடுகிற சம்பவங்களும் நிகழும். சில நேரங்களில் காயம் ஏற்படுகின்றன.

இனப்பெருக்க நேரத்தில் மூன்றிலிருந்து நான்கு குட்டிகள் வரை ஈனுகின்றன. உண்மையான உயிர்பிழைப்புப் போராட்டம் இதற்குப் பிறகுதான் ஆரம்பமாக இருக்கிறது. அதிலும் ஆணாய் பிறந்த குட்டிகளின் நிலைமை பரிதாபம்தான். குட்டிகள் ஈன்ற நாளிலிருந்து நான்கு வாரங்கள் வரை அவை மண்ணுக்குள் வளை தோண்டி வசிக்கின்றன. வேறு யாரையும் அங்கு அவை அனுமதிப்பதில்லை. யாருக்காகப் போராடுகிறோமோ அவர்களுடனேயே போராட வேண்டிய நிலை ஒவ்வொரு உயிரினத்துக்கும் வரும், அதில் கழுதைப்புலிகளும் விதிவிலக்கல்ல. குட்டிகளில் யார் பெரியவன் என்ற சண்டை சிறு வயதிலேயே கழுதைப்புலிகளுக்குள் வந்து விடும்.

தாய் கழுதைப்புலிக்கு இயற்கையில் குட்டிகளுக்கு பாலூட்ட இரண்டு முலைக்காம்புகள் மட்டுமே இருக்கும். இரண்டு காம்புகளில், இருக்கிற நான்கு குட்டிகளில் யார் முதலில் பால் அருந்துவது என்ற சண்டை குட்டிகளுக்குள் நடக்கும். இதில் பலம் பொருந்திய பெண் குட்டிகள் ஆண் குட்டிகளுடன் சண்டையிட்டு வெற்றி பெற்றுவிடுகின்றன. சில நேரங்களில் சண்டையின் முடிவில் ஆண் குட்டிகளைப் பெண் குட்டிகள் கொன்று விடுகின்றன. தன்னுடைய இனத்துக்குள் ‘சண்டை செய்து’ தப்பிப் பிழைக்கும் ஆண் குட்டிகள் மிகச் சிலவே. ஆண் குட்டிகள் வலிமை மிகுந்த பெண் குட்டிகளோடு சண்டையிட்டு வெல்ல வேண்டும்.

60 இலிருந்து 80 வரை இருக்கிற குழுவில் புதிதாகப் பிறந்த குட்டியின் வாசனையை வைத்து மற்ற கழுதைப்புலிகள் குட்டிகளைக் குழுவில் சேர்த்துக் கொள்கின்றன. தாயிடம் பால் குடித்து வளர்கிற குட்டிகள் வளைகளில் பாதுகாப்பாக இருக்கும். இரை தேடிச் செல்கிற தாய் கழுதைப்புலி திரும்பி வரும் பொழுது இரையோடு திரும்பிவரும். பால் சுவையில் இருந்து ஒரு கட்டத்தில் மாமிச சுவைக்கு மாறுகின்ற காலகட்டம் குட்டிகளுக்கு மிக முக்கியமான காலகட்டம். இனி அவை பால் குடிப்பதற்குத் தயாராக இல்லை. இங்கும் ஆண் குட்டிகளின் நிலை பரிதாபம்தான். இரைக்காக மற்ற பெண் குட்டிகளுடன் போராட வேண்டிவரும். கிடைப்பதை உண்டு தப்பிப் பிழைப்பதே அவற்றுக்கு மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கும்.

எல்லாவற்றிலும் இருந்து தப்பிப் பிழைக்கும் ஆண் குட்டிகள் பருவம் அடைகிற வரை தாயுடன் இருக்கின்றன. பருவம் வந்ததும் ஆண் குட்டிகள் குழுவிலிருந்து பிரிந்து செல்லும் ஆண் கழுதைப்புலிகள் வேறு ஒரு கூட்டத்துடன் இணைந்து கொள்கின்றன. அதிலும் ஆண் கழுதைப்புலிகளுக்கு சிக்கல்தான். இன்னொரு குழுவில் நினைத்தவுடன் இணைந்துகொள்ள முடியாது, அதற்கும் ஆண் கழுதைப்புலிகள் சண்டை செய்தாக வேண்டும். மற்றக் குழுவில் உள்ள கழுதைப்புலிகளை அவ்வளவு எளிதில் இன்னொரு குழுவில் எந்தக் கழுதைப்புலிகளும் ஏற்றுக்கொள்ளாது. சண்டை செய்துதான் அவற்றோடு சேர வேண்டும்.

கழுதைப்புலிகளின் பலமே அவை சேர்ந்து இருப்பதுதான். தனித்தனியாக இருப்பது





© Ingo Gerlach / Barcroft Images




போலவே தோன்றும். ஆனால், இரை சிக்கிவிட்டால் ஒரு வித ஓசையை வெளிப்படுத்தி மொத்தக் குழுவையும் வரவழைத்துவிடும். வேட்டையாடுவதற்கான எல்லாத் தகுதிகளும் இருந்தாலும் கழுதைப்புலிகள் அவ்வளவு எளிதில் வேட்டையாடுவதில்லை. சிங்கமோ, சிறுத்தையோ ஒரு இரையை வேட்டையாடும் வரை கழுதைப்புலிகள் காத்திருக்கும். சிங்கம் இரையை வேட்டையாடி வீழ்த்திவிட்டால் மொத்த கழுதைப்புலிகளின் கூட்டமும் சிங்கத்தை சூழ்ந்து வெறுப்பேற்றும். எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க, சிங்கமோ சிறுத்தையோ வேட்டையாடிய இரையை அப்படியே விட்டுவிட்டு ஓடிவிட வேண்டியதுதான். அப்படிக் கிடைக்கிற இலவச இறைச்சிதான் கழுதைப்புலிகள் உயிர் பிழைத்திருக்க உதவுகிறது.

மற்ற விலங்குகள் கழுதைப்புலிகளிடம் சண்டையிடாமல் இருப்பதற்கு இன்னொரு காரணம் "சண்டை செய்ற அளவுக்குக் கழுதைப்புலிகள் தகுதியில்லை" என நினைப்பதுதான். கழுதைப்புலிகள் பலம் வாய்ந்த தாடையை கொண்டவை எப்படியான விலங்கின் எலும்பையும் கடித்தே உடைத்து விடுகிற அளவுக்கு பலமானவை. எலும்பை உடைப்பவன் (Bone crushers) என்ற பட்டப் பெயரும்-இவற்றுக்கு உண்டு. மற்ற விலங்குகளின் குட்டியை வேட்டையாடி அவற்றைக் கொல்வதுதான் இவற்றின் முக்கிய பணியே.

சிங்கமும் கழுதைப்புலிகளும் ஒரே எல்லைக்குள் வாழ்வதால் ஒரே உணவுக்காக இரண்டுமே சரிவிகித அடிப்படையில் சண்டையில் ஈடுபடுகின்றன. அதனால்தான் இரு விலங்குகளும் எதிரியின் குட்டிகளைக் கொன்று விடுகின்றன. கழுதைப்புலிகளிடம் சிங்கக் குட்டிகள் கிடைத்துவிட்டால் சின்னாபின்னமாக்கிவிடும். கழுதைப்புலிகளுக்குப் பயந்துதான் சிங்கமும் சிறுத்தையும் தன்னுடைய குட்டிகளை இரவு பகலாக பாதுகாப்பான இடத்துக்குத் தூக்கிக்கொண்டு திரிகின்றன.

உயிர் பிழைத்திருத்தல் ஓர் உயிரை எந்த எல்லைக்கு வேண்டுமானாலும் அழைத்துச் செல்லும். அதில் பயணித்து பிழைப்பதும் இறப்பதும் அதனதன் திறமையை அடிப்படையாகக் கொண்டதுதான். ●















# முஸ்லிம் தீவிரவாதத்துக்கு களம் அமைக்கும் பௌத்த - சிங்கள மேலாதிக்கம்




யோகநாராயணன்

ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹெந்துனத்தி அண்மையில் கருத்து வெளியிடும் போது "சிங்கள சஹ்ரான்களே முஸ்லிம் சஹ்ரான்களை உருவாக்குகின்றனர்", அதாவது சிங்கள - பௌத்த இன, மத வெறியர்களே முஸ்லிம் பயங்கரவாதம் உருவாவவதற்கு காரணமாக உள்ளனர் என்பதையே அவர் குறிப்பிட்டிருந்தார். நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹெந்துனத்தி எப்போதுமே நேர்மையாகவும், துணிச்சலுடனும் தனது கருத்தை வெளியிட்டு வருபவர். அவர் வெளியிட்ட கருத்துக்களில் எவ்வித தவறும் இருப்பதாக எவரும் கூறி விட முடியாது.

நாடு பரந்தளவில் பரவியுள்ள சிங்கள - பௌத்த பேரினவாத நடவடிக்கைகள் ஏனைய இனங்களை சேர்ந்த மக்களிடையே எழும் கசப்பு, வெறுப்பு போன்ற உணர்வுகளே அவர்களை இலகுவாகத் தீவிரவாதத்தின் பக்கம் தள்ளி விடுகின்றன என்பதை எவரும் மறந்துவிட முடியாது.

அண்மையில் தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது, அமைச்சர் ரிசாட் பதியுதீனைப் பார்த்து "இந்த நாட்டின் சட்டங்களுக்கு உட்பட்டு நடக்க முடியாவிட்டால் நீங்கள் எங்கிருந்து வந்தீர்களோ அங்கேயே போய் விடுங்கள்", எனக் கூறியிருந்தார்.

அமைச்சர் ரிசாட் பதியுதீன் இலங்கையின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு நடக்கவில்லை எனக் குற்றம் சாட்டப்பட்டால், அதை விசாரிக்கவோ அவர் குற்றமிழைத்திருந்தால் அதற்குத் தண்டனை வழங்கவோ நீதிமன்றங்கள உண்டு. அதுவே ஒரு ஜனநாயக நாட்டில் பின்பற்றப்படும் வழிமுறையாகும். அப்படியான நிலையில் அமைச்சர் ரிசாட் பதியுதீன் நாட்டை விட்டு வெளியேற்றும் உரிமையை இவருக்கு யார் கொடுத்தது?

ஏற்கனவே விமல் வீரவன்ச அவர்கள் இலங்கையின் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டவர். அரசாங்கப் பணத்தைத் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டு இவர் மேல் உண்டு. இவரது குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால், அதாவது இலங்கையின் சட்டங்களை இவர் மீறியது உண்மையென முடிவு செய்யப்பட்டால் இவர் சார்ந்த சிங்கள இனத்தின் மூதாதையரின் சொந்த இடமான வங்கதேசத்திற்கு போய் விடுவரா? அதாவது இலங்கையின் சிங்கள இனத்தை தோற்றுவித்த விஜயன் வங்கதேசத்திலிருந்தே வந்தவன் என அவர்களின் வரலாற்று நூலாகக் கருதப்படும் மகாவம்சம்கூறுகிறது.

நிதி அமைச்சர் மங்கள சமரவீர இலங்கையில் பௌத்தர்கள், இந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் என எல்லா மதத்தினரும் சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கியர் எனப் பல இனத்தினரும் நீண்ட காலமாகவே தொடர்ந்து வாழ்ந்து வருகின்றனர் எனவும் இந்த நாடு அவர்கள் எல்லோருக்கும் உரிமையுடையது எனத் தெரிவித்திருந்தார்.

இந்தக் கருத்து கோட்டே விகாராதிபதி தர்மலங்கார தேரரைப் பொங்கியெழ வைத்து விட்டது. உடனடியாகவே ஊடகவியலாளரைக் கூட்டி இலங்கை ஒரு பௌத்த - சிங்கள நாடு எனவும், அந்தக் கருதுகோளை ஏற்றுக் கொள்ளாத எவருக்கும் இந்த நாட்டில் இடமில்லை என கடிந்து கூறிவிட்டார். அதாவது பௌத்த - சிங்களக் கோட்பாட்டை ஏற்றுக்கொள்ளாத சிங்களவருக்கும் நாட்டில் இடமில்லை என்று விட்டார். அவர் கருத்தின்படி இந்த நாட்டின் நிதியமைச்சர் மங்கள சமரவீரவுக்கும் இந்த நாட்டில் இடமில்லை. இந்த நாட்டில் பிராஜாவுரிமை வழங்கும் அல்லது ரத்துச் செய்யும் அதிகாரம் இவருக்கு எப்போது யாரால் வழங்கப்பட்டது என்பது தெரியவில்லை.

புத்த பகவானின் போதனைகளில் மிகவும் முக்கியமானது ஆசையைத் துறக்க வேண்டும் என்பதாகும். ஆசையே எல்லாப் பாவங்களுக்கும் மூலமாக அமைகின்றன என்றே புத்தபகவான் போதித்திருந்தார். ஆனால், புத்தரின் சீடரெனத் தன்னை இனங்காட்டிக் கொள்ளும் ஒரு விகாராதிபதி ஒரு நாடே ஒரு மதத்தினருக்கு உரியதெனப் பேராசையை வெளிப்படுத்தியுள்ளார். புத்த துறவிகளுக்குரிய மஞ்சள் அங்கியை அணிந்து கொண்டு புத்த பகவானின் போதனைக்கு நேர்விரோதமாகச் செயற்படுபவர்களை மக்கள் இனம் கண்டு கொள்வது அவசியமாகும்.

கடந்த காலங்களின் பொதுபலசேன, ராவணபலய, சிங்கள ராவய போன்ற பௌத்த அமைப்புகள் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகள் கொஞ்ச நஞ்சமல்ல. பள்ளிவாசல்கள தாக்கியும், புனித குர்ஆனை எரித்தும், படுகொலைகள், சொத்துகள் - குடியிருப்புகளை அழித்தல், உடைமைகளை சூறையாடல், மாட்டிறைச்சி விற்பதற்கெதிரான நடவடிக்கைகள் என முஸ்லிம்கள் மேல் தொடர்ந்து அநீதிகள் மேற்கொள்ளப்பட்டன.

எனவேதான் சுனில் ஹெந்துனெத்தி இப்படியான சிங்கள சஹ்ரான்கள் போன்ற கட்டற்ற கூட்டம் காரணமாகவே முஸ்லிம் சஹ்ரான்கள் உருவானார்கள் என்று சொன்னதில் தவறு இருக்க முடியுமா?

அதற்காக தௌபீக் ஜமாத் அமைப்பினர் செய்ததை நியாயமென்று எக்காரணம் கொண்டும் கூறி விட முடியாது. அந்தத் தாக்குதல்கள் கொடூரமான, அதேவேளை கோழைத்தனமான பயங்கரவாதமாகும்.

முஸ்லிம் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கெதிராக போராட்டங்களை நடத்தியிருந்தால் அதை நியாயம் எனச் சொல்வல முடியும். ஆனால், முஸ்லிம்கள் மீதான ஒடுக்குமுறையுடனோ, வன்முறைகளோடோ எவ்வித சம்பந்தமுமில்லாத அப்பாவி கத்தோலிக்க, கிறிஸ்தவ மக்கள் மீதும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் மீதும் குண்டுத் தாக்குதலை நடத்தியது மனிதகுல படுபயங்கர நடவடிக்கையாகும். முஸ்லிம் மதங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளைக் காட்டி இத்தாக்குதலை நியாயப்படுத்தி விட முடியாது.

அதேவேளையில், இங்கு முஸ்லிம்கள் மேல் இழைக்கப்பட்ட தொடர்ச்சியான ஒடுக்குமுறைகளே சர்வதேசப் பயங்கரவாத சக்திகள் இங்கு கால் பதிக்கக் களமமைத்தன என்பதையும் மறுக்க முடியாது.

இந்தப் படுபாதக செயலுடன் தொடர்புடைய பலர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அதன் காரணமாக மேலும் பலர் கைது செய்யப்படும் நிலையுள்ளது. தவிர, பல்வேறு ஆயுதங்களும் வெடிபொருட்களும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. நாட்டின் பல பகுதிகளிலும் பரந்து நிலைபெற்றிருந்த தௌபீக் ஜமாத் அமைப்பின் வலைப்பின்னல் வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளது.

(23ஆம் பக்கம் பார்க்க)

# ஓவியம் : தேடல்கள், புரிதல்கள்

**ராஜராஜன்**




கணபதி சுப்ரமணியன் எழுதிய 'ஓவியம் : தேடல்கள், புரிதல்கள்' எனும் நூலை அண்மையில் படித்தேன். தேடலும் -புரிதலும் எனும் உளவியல் போக்கு ஓவியத்துக்கு மட்டுமல்ல, வாழ்க்கைக்கும்தான். கணபதி சுப்ரமணியன் எனும் ஓவிய உணர்வாளரின் வேள்வியாக இந்த நூல் நமது கலைத்தளத்தை காண்கிறது. 'ஓவியம்' என்பது எல்லைகளற்ற உணர்வுக்கலை. நிகழ்த்துக் கலைகளுக்கு உரிய மனனக் கோட்பாடுகளற்ற களம். எனினும், தன்னைத்தானே புதுப்பித்துக்கொண்டு பல்லாயிரம் ஆண்டுகளை கடக்கும் வல்லமை மிக்க, மனித நாகரிகத்தின் வேராக திகழும் கலைவடிவம். ஓவியங்களை வரைவதை விடப் புரிந்து கொள்வதற்கு நீண்ட காலம் ஆகலாம். காரணம் ஓவியத்துக்கான செயலாக்க வழிமுறைகள் வேறானது, ஓவியத்தின் உள்கட்டமைப்பாக கரு, உணர்வுகள், வண்ணத் தீண்டல்கள் போன்ற புற, வய லயங்களின் மெய்மங்களை உணர்வு வழியாக புரிந்துகொள்வதற்கு போதிய சூழலியல் தரவுகளின் தேவை எளிதல்ல.

இங்கு ஓவியம் என்பது, சமயமாகவும், அலங்காரமாகவும், வர்த்தக ஈர்ப்புக்காகவும் இயங்கி வருகிறது. ஒரு ஓவியத்தை எப்படிப் பார்ப்பது என்பது கூட ஒரு புரிதலுக்குட்பட்ட நிலை. பரவலாக்கப்பட்ட மெய்ம வகைகளின் தேவையும், தேவையின் எல்லைகளைக் கடந்து சுயாதீனமான உருவாக்கல் வகை ஓவியங்களின் பொருட்சுவையை அறிந்திட, ஓவியத்துக்கான வாசிப்பின் தேவைகளை மென்பொருள் வழியான தரவுகள் பூர்த்திசெய்தாலும், மரபு ரீதியான வாசிப்பின் உன்னதத்தை மீண்டும் மீண்டும் உணர்த்த வேண்டிய நிலையில் நிகழ்காலத் தலைமுறைகள்.

எங்கும் டிஜிட்டல் மயமாகிவிட்டது ஓவியத்துறை மாற்றுரு கொள்கிறது என்ற நிலைகளிலும், ஓவியங்களும்,ஓவியர்களும், பல்கிப் பெருகிவரும் தகவலும் நம்மை அடைகிறது. இன்றும் ஓவியத்தின் புரிதல்களை புகட்டும் சூழலியலின் மௌனநீட்சிக்கு எல்லைகளற்ற நிலையில்தான், ஓவியங்கள் குறித்த உணர்வுகளை பகிர்ந்துகொள்ளும் நூல்கள் தேவைப்படுகிறது. வலிமை மிக்க கலை விமர்சகர்களின் எண்ணிக்கையும் மிகக் குறைந்து விட்டது. வாசிப்பு வழியான தத்துவ பரவலாக்கத்தின் தேவையை உணர்ந்து இன்றைய எழுத்தாளர்களின் வரவை எதிர்நோக்குகிறோம்.

கணபதி சுப்ரமணியம் எழுதியுள்ள 'ஓவியம்: தேடல்கள், புரிதல்கள்' எனும் தலைப்பிலான நூல் முதல்பகுதியாக வெளியாகிறது. ஓவியம் எனும் மாபெரும் கலையின் உள்ளீட்டுக் கூறுகளை இயன்ற அளவில் எண்ணற்ற எடுத்துக்காட்டுகளுடன் விரிவாக பகிர்ந்து கொண்டிருக்கிறார். பல்லவர்கால படைப்புக் கள் முதல் பால் க்ளே வரையும், அஜந்தா ஓவியங்கள் முதல் ஜோகன்ஸ் வெர்மியர் வரையிலும், ரவீந்திரநாத் தாகூர் முதல் பியட் மொன்றைன் வரையிலும், லியனர்டோ டாவின்ஸி முதல் வின்சென்ட் வான்கோ

(22ஆம் பக்கம் பார்க்க)



மிக நம்பி
மந்திரவாதியின் பெட்டிக்குள்
ஒளிந்து கொள்கிற
குழந்தையாய்
என்னை ஒப்புக் கொடுத்திருக்கிறேன்
புறாவாய் மாற்றிவிடு
அல்லது ஒரு பூங்கொத்தாக
ஒரு பலூனாக
ஒரு கிளியாக
ஆனால்
மீண்டும் இருந்தபடியே
திறந்து விடாதே
ஒரு நம்பிக்கையை
நம்பிக்கையாகவே
திருப்பித் தருவதில்
உள்ள புறக்கணிப்பின் பாரத்தை
தாங்கும் திராணி எனக்கில்லை

**- நேசமித்**

# அருளரின் 'லங்கா ராணி'

**தேவமுகுந்தன்**



ஈழத்து தமிழ் இலக்கியத்தைப் பொறுத்தவரையில் *1983 ஆம் ஆண்டை ஒரு பிரிகோடு எனப் பேராசிரியர் கா.சிவத்தம்பி குறிப்பிடுவார். ஏனெனில் 1983 ஆம் ஆண்டு இலங்கையில் தமிழருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரிய வன்செயலான கறுப்பு ஜூலைக்குப் பின்னர் தமிழரின் விடுதலைப் போராட்டம் உத்வேகமடைந்தது எனலாம். இது ஈழத்து இலக்கியப் பரப்பிலும் தாக்கத்தைச் செலுத்தியது. 1983 ஜூலை வரையில் சீதனம், சாதி, சமவுடமை போன்ற கருப்பொருட்களைக் கொண்டமைந்ததாகவே பெரும்பாலான ஈழத்து தமிழ் இலக்கியங்கள் காணப்பட்ட போதிலும் 1983 ஜூலை கலவரத்திற்குப் பிற்பாடு விடுதலைப் போராட்டம், சுதந்திரம், தனிநாடு என கருப்பொருட்களிலும் மாற்றம் ஏற்படத் தொடங்கின.*

ஆனால் இதற்கு விதிவிலக்காக *1983* இற்கு முன்னதாக விடுதலைப் போராட்டம் தொடர்பான மிக அரிதாகவே படைப்புக்கள் வெளியாகின. இவற்றில் முக்கியமானது அருளரின் 'லங்கா ராணி' ஆகும். இதுவரையில் மூன்று பதிப்புக்களைக் கண்ட இந்தநாவலானது *1977* இல் இலங்கையில் நடைபெற்ற தமிழருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வன்முறையின் பின்னர் *1977 - 1978* காலப்பகுதியில் எழுதப்பட்டதாகும்.

*1977* இனக் கலவரத்தினால் பாதிக்கப்பட்ட தென்னிலங்கையில் வாழ்ந்த தமிழ் மக்கள் கொழும்பில் அகதி முகாம்களில் தங்கவைக்கப்பட்டு பின்னர் கப்பல்களில் யாழ்ப்பாணத்திற்கு அப்போதைய அரசினால் அனுப்பி வைக்கப்பட்டனர்.




'லங்கா ராணி' என்ற இந்த நாவலானது லங்கா ராணி கப்பல் கொழும்பில் இருந்து புறப்பட்டு யாழ்ப்பாணத்தை அடையும் வரையான மூன்று நாட்களில் நகர்கின்றது. கப்பலின் பயணப்பாதையானது தென்னிலங்கையைச் சுற்றிப் பின்னர் கிழக்குக் கடலினூடாகப் பருத்தித்துறைத் துறைமுகத்தை அடைவதாக உள்ளது.

சரவணன், தேவன், குமார் மற்றும் வெள்ளை வேட்டி கட்டிய இளைஞன் என அடக்குமுறைகளுக்கு எதிரான மனோபாவம் மிக்க கப்பலில் செல்லும் இளைஞர்களின் உரையாடல்களின் மூலம் கதை நகர்கின்றது. *1977* இனக்கலவரம் இந்த இளைஞர்களில் இலங்கைத்தீவில் இனியும் தமிழர்கள், சிங்களவர்களுடன் சேர்ந்து வாழ்வது சாத்தியமற்றது என்ற மனோபாவத்தை ஏற்படுத்துவதை நாவல் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது.

கப்பலில் செல்லும் இளைஞர்களின் போராட்ட உணர்வுகளை நாவலாசிரியர் இயல்பாக விபரிக்கின்ற போதிலும் நாவலின் பல இடங்கள் கலைத்துவமற்று கட்டுரைத்தன்மை கொண்டதாக இருப்பதை அவதானிக்க முடிகின்றது. நாவலாசிரியரே இந்தநாவலின் மூன்றாம் பதிப்பின் முன்னுரையில் 'லங்காராணி ஈரோஸ் அமைப்பின் கொள்கை விளக்க நூல்' எனக்

(22ஆம் பக்கம் பார்க்க)

## வாசிகை

உங்கள் ஆக்கங்களை 'வாசிகை' , ஆசிரியர், புதுவிதி, 107 : இராச வீதி, கோப்பாய், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கோ அல்லது sinnarajavimalan18@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம்.

**புதுவிதி சிறுகதைப் போட்டியில் பாராட்டுப் பரிசு பெற்ற சிறுகதை**

# அம்மாவும் அந்த விஷயமும்



லோஜிதா முரளிதரன்

‘எனக்கு ஒரே பயமாக் கிடக்கு என்ன செய்யிறது?”, இந்தக் கேள்வியை இப்ப என்ர மனசத்தான் கேக்கிறன். ஆனா பல தடவைகள் அம்மாட்ட சொல்லிப் போட்டன். என்னவோ தெரியேல்ல இப்பவெல்லாம் அம்மா என்ர இந்தக் கேள்விய ஒரு பொட்டாவே எடுக்கிறதில்ல என்பது மட்டும் எனக்கு நல்லாவே தெரியும். ‘ம்... ம்...”, நான் இதே வார்த்தையை முதன் முதல் அம்மாட்ட சொல்லேக்க, அம்மா சொன்னா ‘பிள்ள இதெல்லாம் ஒரு விசயம் எண்டு பயந்து போய் கேக்கிறாய். எதுக்கெல்லாம் பயப்பிடனும் எண்டு ஒரு இதில்லையோ? பேசாமல் இரடியம்மா” எண்டு சொன்னா. அம்மா என்னதான் எனக்கு ஆறுதல் சொன்னாலும் அந்த விசயத்த நினைச்சால் எனக்கு ஒரே பயம்தான் வரும்.

● ● ●

நான் இப்ப எட்டாம் வகுப்புப் படிக்கிறன். ஆனா ஆறாம் வகுப்பில் இருந்தே இந்த விசயத்த நினைச்சா டிக் டிக் என்று அடிக்கிற என்ர இதயம் ஒரு நிமிசம் தன்ர தொழிலையே மறந்து போயிடும். எனக்கு இந்த விசயத்த நினைக்கேக்க மட்டும் பயம் ஒழுங்கு தவறாமல் வந்திடும். ஏன் எனக்கு மட்டும் இந்த விசயத்த நினைக்கேக்க பயம் வருதோ தெரியேல்ல. ஆனா என்ர வகுப்பில் படிக்கிற பிள்ளையள் இந்த விசயத்த நினைச்சு பயப்படுற மாதிரி தெரியயேல்ல. அதால நானும் என்ற நண்பியளிட்ட இந்த விசயம் தொடர்பா ஒண்டும் கேக்கிறேல்ல. இந்த விசயத்தப் பற்றி என்ர நண்பியளிட்டச் சொல்லிச் சந்தேகத்தைத் தீர்க்கலாம் எண்டா, கேக்கிறதுக்கும் பயமாகக் கிடக்கு. பயம்... பயம் எண்டு என்ர மனம் ஒரே காயம்தான் படுது.

இந்த விசயம் என்ர அக்காவுக்கு எட்டு வருசத்துக்கு முதல் நடந்தது. ஆனா அக்கா இந்த விசயம் நடக்கிறதுக்கு முதல் பயப்பிடவேயில்லை. நெடுகலும் எப்படி இருப்பாளோ அப்படித்தான் இருந்தவள். இந்த விசயம் தொடர்பா நான் நடிக்கேல்ல. உண்மையில இந்த விசயத்தப் பற்றி நினைச்சால் சரி, பயம் காலில இருந்து தலைக்கு ஏறி ஏன் என்ர செயல்களிலையும் தென்படுற மாதிரி இருக்கும். நான் ஒருக்கா படத்தில பாத்திருக்கிறன். (படத்தின்ர பெயர மறந்திட்டன். ஏனெண்டா இந்த விசயத்தைப் பற்றி அந்தப் படத்தில காட்டினதுதான் பிரச்சினை) இந்த விசயம் நடக்கப் போகுது எண்டா வயித்துக்க குத்தும் எண்டு எப்ப படத்தில அதைப்பார்த்தனோ, அண்டையில் இருந்து சும்மா வயித்துக்க குத்தினாலும் பயப்பிடுவன்.

ஒருநாள் இப்படித்தான் என்னத்தையோ சாப்பிட்டுட்டு செமிக்காமல் போய் வயித்துக்க குத்தப் பெரிசாக் கத்திப் போட்டன். அப்ப எங்கட வீட்டுக்குப் பக்கத்தில இருக்கிற என்னோட ஒண்டாப் படிக்கிற கணேஸ் வீட்ட நிண்டவன். அவன் நான் கத்தினதப் பார்த்திட்டு உண்மையாவே பயந்து போட்டான். அப்ப அக்கா வந்து, ‘யே சந்திரா ஏன் கத்தினி?”, எண்டு கேக்க, நான் சும்மா எதையோ சொல்லிச் சாமாளிச்சுப் போட்டன். ஆனா, எனக்கு இப்பவும் கணேஸைக் கண்டால் வெட்கமாய்த்தான் இருக்கும். ஆருக்குத் தெரியப் போகுது. இந்த விசயத்த நினைச்சுத்தான் நான் அண்டைக்கு கத்தினான் எண்டு எனக்கு மட்டும்தானே தெரியும்...

ஒருமுறை எங்கட அக்காவுக்கு இருபத்தோராவது பிறந்த நாள் செய்யிறதுக்கு வீட்டில திட்டமிட்டிருந்திச்சினம். அப்ப எனக்கு ஒரு யோசினை வந்தது. அக்கான்ர பிறந்தநாளுக்கு மாமான்ர மகள் அதுதான் என்ர மச்சாள் வாசுகி வருவாள்தானே, அவளிட்ட இந்த விசயம் தொடர்பா கேட்டா என்ன எண்டு. அவளிட்ட ஏன் கேக்க நினைச்சனான் எண்டா வாசுகி என்னோட நல்ல ஒட்டு. அவளுக்கு என்னைவிட ரெண்டு வயது கூட. இருந்தாலும் நாங்க எல்லா விசயத்தப் பற்றியும் கதைப்பம். ஒருக்கா இப்படித்தான் வாசுகி எங்கட வீட்ட வந்த நேரம் அம்மாவுக்குத் தெரியாம அரிசி, பருப்பு , தேங்காய்,வெங்காயம் சின்ன பாத்திரம் எல்லாம் எடுத்து வீட்டுக்குப் பின்னால சமைச்சு விளையாடினம். அப்ப என்ர சட்டையில நெருப்புப்பட்டு பெரிய சிக்கலாப் போட்டுது.

இது ஒரு பக்கம் இருக்க ஒருக்கா அப்பாக்குத் தெரியாம அவரின்ர சேட்டு பொக்கற்றுக்க எண்பது ரூபா எடுத்து நிறைய இனிப்புக்கள் வாங்கிச் சாப்பிட்டிருக்கிறம். இப்படி நானும் வாசுகியும் செய்த விசயங்களை நினைச்சா சிரிப்புத்தான் வரும். அதாலதான் இந்த விசயத்தப் பற்றி அவளிட்டையே கேட்டு அறியலாம் எண்டு முடிவெடுத்தன்.

இப்படி இந்த விசயத்தப் பற்றி வாசுகிட்டக் கேக்கிறதுக்காக அக்கான்ரை பிறந்தநாளை எதிர்பார்த்துக் காத்திருந்தன். என்ர எதிர்பார்ப்பிற்குப் பதில் கூறும் முகமாக பத்தாம் மாதம் எட்டாம் திகதி இராண்டாயிரத்து பதினேழு அக்கான்ர பிறந்த நாளும் வந்தது. நான் மாமாவையளை முக்கியமாய் வாசுகியின்ர வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தன். நினைச்சபடி மாமாவையள் வந்தினம். ஆனால் அவையள் நீண்ட நாட்களிற்குப் பின் வந்த படியால் ஏமாற்றத்தைத்தான் எனக்குப் பரிசாகக் கொண்டு வந்திருந்தினம். காரணம் மாமாவுடன் அத்தை மட்டும்தான் வந்திருந்தா. வாசுகி வரேல்ல.

நான் உடனே அத்தையிட்ட ‘வாசுகி ஏன் வரேல்ல அத்தை?”, எண்டு கேட்டன். பதிலாக அத்தை சிரிப்பை மட்டும்தான் தந்தா நானும் அவாவைப் பாத்து போலிச் சிரிப்புச் சிரிச்சுப் போட்டு உம்மெண்டு கொண்டு நிண்டன். கொஞ்ச நேரத்தால ‘வாசுகிக்கு ரியூசன் கிளாஸ் இருக்கு சாந்து, அதான் அவள விட்டுட்டு வந்திட்டம்”, எண்டு அத்தை சொன்னா. அவா சொன்னதைக் கேட்டோன எனக்கு அழுகைதான் வந்தது. இருந்தாலும் இனி என்ன செய்யிறது எண்டு பேசாமல் நிண்டன்.

அப்ப யாரோ என்ர பெயரச் சொல்லிக் கூப்பிடுற மாதிரி இருந்தது. ஆர் எண்டு வீட்டுக் கேற்றுப் பக்கம் திரும்பிப் பாத்தன். என்ன ஆச்சரியம் ! வாசுகி கேற்றடியில் நிண்டாள். எனக்கு வாசுகி வரேல்ல எண்டு அத்தை சொல்லேக்க வராமல் உள்ளேயே திண்டாடிக் கொண்டிருந்த அழுகை சிரிப்பாய் வந்தது. நான் உடன வாசுகிய கூட்டிக் கொண்டு வந்திட்டு அத்தையப் பாத்துக் கேட்டன் ‘அத்தை நீங்க என்னை நல்லா ஏமாத்திட்டீங்க” எண்டு வெளிப்படுத்தினன். (இது போலியான சிரிப்பு இல்லை) பிறகு வாசுகியக் கூட்டிக் கொண்டு போய் அக்கான்ர பிறந்த நாளுக்கு செய்த கேக், வடை எல்லாம் குடுத்தன்.

இப்படியே பல மணி நேரத்துக்குப் பிறகு அக்கான்ரை பிறந்த நாள் நிகழ்வுகளும் முடிஞ்சுது. நான் எதிர்பார்த்திருந்த நேரமும் வந்தது. வாசுகியும் நானும் ஒண்டா படுக்கிறதுக்கு பாயையும் தலகணியையும் எடுத்துக் கொண்டு சின்னறைக்குள் போனம். போய் ரெண்டு பேரும் படுத்துக் கொண்டு நிறைய விசயங்களை கதைச்சம். அவள் என்ர படிப்பு பிரண்ட்ஸ், விளையாட்டு என எல்லாத்தைப் பற்றியும் கேட்க, நானும் அவளைப் பல விசயங்கள் கேட்டு அறிஞ்சு கொண்டன்.

ஒரு அரை மணித்தியாலம் போனவுடனே நான் இந்த விசயத்தப் பற்றி வாசுகிட்ட கேட்பம் எண்டு யோசிச்சன். வாசுகிக்கு இந்த விசயம் நடந்துட்டுதுதானே அதால அவளுக்கு எல்லாம் தெரியும்தானே என நினைச்சுக் கொண்டு வாசுகிட்ட கதையக் குடுத்தன்.

‘வாசு யேய்”

‘என்னடி சொல்லு”

‘அதடி அது வந்து”

‘இப்ப எது வந்தது”

‘போடி”

‘நீ என்ன கேட்க வந்தனி சொல்லு...”

‘எடியேய், பெரிய பிள்ளை ஆகிறது எண்டா என்னடி”,

நான் வெளிப்படையாய் எனக்கிருந்த சந்தேகத்தக் கேட்டுப்போட்டன். நான் கேட்ட அடுத்த நொடி வாசுகி நல்லாவே சிரிக்கத் தொடங்கீட்டாள். எனக்கு ஒரு மாதிரியாய் இருந்தது. நான் உடன வாசுகீட்ட, ‘உப்படி சிரிக்காதயடி அம்மா, அப்பாக்கு கேட்கப் போகுது பிறகு ஏன் சிரிச்சனீங்கள் ஏன் அழுதனீங்கள் எண்டு சும்மா கேட்டுக் கொண்டிருப்பினம்”, எண்டு சொன்னன்.

அவளும் உடனே சிரிப்பை நிற்பாட்டிப் போட்டாள். நான் பிறகும் பொறுமையில்லாமல் அதே கேள்வியைக் கேட்டன், ‘வாசு பெரிய பிள்ள ஆகிறது எண்டா என்னடி?”

அவள் உடன சொன்னாள், ‘அது நீ பெரிய பிள்ளை ஆகேக்க தெரிஞ்சு கொள்ளடி. இப்ப பேசாமப் படு பதினொரு மணிக்கு மேல ஆகுது. நாளைக்குப் பள்ளிக்கூடம் எல்லோ... படடி”, எண்டு. இதுக்கு மிஞ்சி அவளிட்ட இருந்து என்ர சந்தேகத்துக்கு பதில் கிடைக்காது எண்டு நினைச்சுக் கொண்டு...

● ● ●

‘நிலா தலையை அங்கால பக்கம் திருப்பு”, என்று என்ர அம்மா சந்திராவின் குரல் கேட்டதும் சுயநினைவிற்கு வந்த நான், என்னோட செல்ல அம்மா சந்திராவிடம், ‘பெரிய பிள்ளை ஆகிறது எண்டா என்ன?”

என்ற சின்ன வயசுச் சந்தேகத்த நினைச்சு பெரிசா சிரிக்கத் தொடங்கீட்டன். உடன அம்மா, ‘ஏன் நிலா சிரிக்கிறாய்? “ எண்டு கேட்டா.

நான் ‘ஒண்டுமில்லை சும்மாதான் அம்மா”, எண்டு சொல்லிப் போட்டு அம்மா எடுத்துத் தந்த பெரிய கறுப்பு பேனைக் குத்தினன். அம்மாவுக்கு எங்க தெரியப் போகுது. வாசுகிப் பெரியம்மா அம்மான்ர சின்ன வயசுக் கதையளை எனக்குச் சொன்னதப் பற்றி. ☹





சிவகார்த்திகேயன் வருடத்திற்கு ஒரு படம் என்ற ரீதியிலேயே நடித்து வருகிறார். இதை மாற்றி இனி 6 மாதத்துக்கு ஒரு படம் என்ற ரீதியில் நடிக்கவுள்ளேன் என அறிவித்துள்ளார்.



இமைக்கா நொடிகள் மூலம் தமிழில் அறிமுகமானவர் ராசி கன்னா. தற்போது தமிழில் 3 படங்களை கைவசம் வைத்துள்ளார். இவரின் நடிப்பில் அண்மையில் வெளியான அயோக்கியா படத்தில் ரவீனா ரவி இவருக்காக குரல் கொடுத்திருந்தார். ஆனால், அவரின் பெயர் படத்தில் இடம்பெறவில்லை.

இதைப் பாரத்த ராசிக்கன்னா அவரிடம் மன்னிப்புக் கேட்டார்.



அஜித் இப்போது எச்.வினோத் இயக்கத்தில் 'நேர்கொண்ட பார்வை" படத்தில் நடிக்கிறார். அவரின் அடுத்த படத்தையும் வினோத்தே இயக்கவுள்ளார்.

முதலில் வினோத் சொன்ன கதையில் நடிக்க அஜித் மறுத்த நிலையில், அவர் சொன்ன வேறு ஒரு கதையில் நடிக்க சம்மதித்துள்ளார்.

இந்தப் படத்தையும் போனி கபூரே தயாரிக்கிறார். படத்திற்கான ஒப்பந்தங்களும் கைச்சாத்தாகியுள்ளன.



மெல்லிய உடல்வாகைத் தொடர்ந்து பேணி வருகிறார் அமலாபால். இதற்கு தினமும் செய்யும் யோகா பயிற்சிதான் காரணம் என்று கூறிய அவர் அது சம்பந்தமான படங்களையும் வெளியிட்டுள்ளார். இதற்கு ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

அட்லி இயக்கத்தில் இன்னமும் பெயரிடப்படாத படத்தில் நடித்து வருகிறார் விஜய்.

அடுத்து மாநகரம் இயக்குநர் லோகேஷ் கனகராஜ் படத்தில் நடிக்கவுள்ளார். படத்தின கதை ரௌடிகளின் வாழ்வை மையமாகக் கொண்டது.

படத்திற்கு அனிருத் இசையமைக்கவுள்ளார். 50 நாட்களில் படப்பிடிப்பை முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.





சசிகுமாரின் 19 ஆவது படமாக உருவாகிறது ராஜவம்சம். இந்தப் படத்தை புதுமுக இயக்குநர் கதில்வேலு இயக்குகிறார்.

இந்தப் படத்தின் நாயகியாக நிக்கி கல்ராணி நடிக்கவுள்ளார். ராதாரவி, தம்பி ராமையா, யோகிபாபு, சதீஷ், ரமேஷ்கண்ணா, சிங்கம்புலி ஆகியோரும் இந்தப் படத்தில் நடிக்கவுள்ளனர்.

ரகுல் ப்ரீத் சிங் தற்போது ஹிந்தியில ஒரு படத்தில் நடிக்கிறார். இதில் அவருக்கு விடுதியில் மது ஊற்றிக் கொடுக்கும் பணிப் பெண் வேடம்.

இதற்காக சிறப்புப் பயிற்சியுடன் அது சம்பந்தமான படிப்பையும் படித்துள்ளாராம் ரகுல்.

புதுவிதி
PUTHU VITHI

■ நோக்கன்

# அதிகார மோகத்தால் மறைக்கப்படும் பயங்கரவாதம்?

இன்று இலங்கையில் காணப்படும் அரசியல் ஸ்திரமின்மை நாட்டைத் தவறான பாதையில் இட்டுச் சென்று விடுமோ என்று மக்கள் அஞ்சுகின்றனர். தனி மனித இலாபம் கருதியே பல முடிவுகள் எடுக்கப்படுகின்றன எனவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். ஆட்சி பீடங்களில் இருப்பவர்களிடம் காணப்படும் தனி மனித முரண்பாடுகள், கொள்கை ரீதியான கருத்து வேற்றுமைகள், அவர்களுக்குள் இருக்கும் பொருளீட்டும் அவாக்கள், பின்னணி அரசியல், அவர்களை பின் நின்று நடத்தும் ஏகாதிபத்திய சக்தி - முதலாளித்துவம் எனப் ...லவற்றின் நிகழ்ச்சி நிர...ளாடு பின்னிப் பிணைந்தே அர... நடவடிக்கைகள் மு...கப்படுகின்றன.

உ... லேயே இப்படி ஒரு பய...தம் நடந்து விட்டால் அந்த நாட்டின் அரச கட்டிலில் இருப்பவர்கள் என்ன செய்ய வேண்டும்? இது போன்றதொரு தொடர் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் நடைபெற்ற பல நாடுகள் உண்டு. ஐ.எஸ். அமைப்பின் பயங்கரவாதத்துக்குள் அகப்பட்ட பல நாடுகள் எம்மாதிரியான நடவடிக்கைகளை எடுத்தார்கள் என்று பார்த்தாவது எம்மவர் நடந்திருக்கலாம்.

இத்தனை அனர்த்தங்கள் நடைபெற்ற பின்னும் ஏதோ ஒரு சிறு சம்பவம் நடைபெற்றதாகவே அரசு நடப்பது வேடிக்கையாக இருக்கிறது. தாக்குதல்கள் நடைபெற்ற சில நிமிடங்களுக்குள்ளேயே தாக்குதல்தாரிகள் யாரென்பதும், அவர்கள் ஏன் இப்படியான தாக்குதல்களை நடத்தினார்கள் என்பதுவும், அவர்களின் நோக்கம் என்ன என்பதையும் புலனாய்வாளர்கள் கண்டுபிடித்து வெளியிட்டனர். இதன் பின்னும் அரசு அது தொடர்பான சூத்திரதாரிகளில் கைவைக்கப் பின்வாங்கி நிற்பது அவர்கள் மக்களுக்கானவர்கள் அல்லர் என்பதைத் தெளிவாக இனங்காட்டி இருக்கிறது. அரசு ஏன் இப்படி நடவடிக்கை எடுக்கத் தயக்கம் காட்டுகிறது? வாக்கு வங்கியினாலா? பயங்கரவாதத்தின் மூலாதாரிகளைக் கொண்ட சிறுபான்மை இனத்தின் நம்பிக்கையை இழந்துவிடுவோம் என்ற பயத்தினாலா?

தற்போதுள்ள அரசியலில், மைத்திரிக்கு நண்பன் ரணிலின் விரோதி என்றும் ரணிலின் நண்பன் மைத்திரிக்கு விரோதி என்றும் ஒரு சமன்பாட்டை அவர்களுக்குள் இருக்கும் 'நான்" என்ற ஆணவம் ஏற்படுத்தி இருக்கிறது. இப்படியான நிலைமைகளைத் தோற்றுவித்ததில் முக்கிய காரணம் உலக அரங்கிலுள்ள முதலாளித்துவச் சக்திகளே என்று குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது. அந்தந்த நாட்டின் தேவைகளுக்காக இலங்கை அரசியல் பயன்படுத்தப்படுகிறது. இலங்கை அரசியல்வாதிகளும், ஆட்சியாளர்களும் நினைத்தபடி ஒன்றும் செய்துவிட முடியாதபடி நிலைமைகள் இருக்கின்றன என அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். பல நாடுகளிடம் நக்கிவிட்டு நாவிழந்து போயிருக்கிறது தற்போதைய அரசாங்கம்.






நாடாளுமன்றத்தைக் கலைத்துவிடத் துடிப்பதும், தேர்தல்களைத் தள்ளிப் போட்டு தொடர்ந்தும் தானே ஆட்சி பீடத்தில் இருப்பதற்கான எண்ணத்தை ஜனாதிபதி மைத்திரி கொண்டுள்ளார் எனவும் பேசிக் கொள்கிறார்கள். அது உண்மையானால் மைத்திரி தனது உச்ச பட்ச பலத்தை உபயோகித்து அங்ஙனம் செய்துவிட்டு பயங்கரவாதத்துக்கு எதிரான விசாரணையை நேர்மையாக முன்னெடுப்பாரா? அப்படி அவர் செய்வதற்கும் வாய்ப்பிருப்பதாகவும் எண்ண முடியாது. ஏனெனில் பயங்கரவாதத்தை ஊக்குவித்தவர்கள் என்ற நபர்களின் பட்டியலில் மைத்திரியால் காப்பாற்றப்படுபவர்கள் பலர் இருக்கிறார்கள். அப்போ மைத்திரியின் தொடர்ச்சியும் நாட்டு மக்களுக்கு நன்மை அளிக்கப் போவதில்லை.

இந்த விடயங்களை எல்லாம் ஒன்று சேர்த்துப் பார்க்குமிடத்து, தற்போதைய அரசியல்வாதிகள் யார் ஆட்சிக்கு வந்தாலும் முகங்கள் மட்டும் மாறுமே ஒழிய நடவடிக்கைகள் மாறப்போவதில்லை என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகிறது. ஒட்டு மொத்த அரசியல்வாதிகளும் சர்வதேச அரசியலுக்குள் அகப்பட்டு அவர்கள் நலன்களுக்காகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். வெளி நாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பதற்கான இராஜதந்திர நகர்வாகவும் அவற்றைப் பார்க்க முடியாது. ஏனெனில் அப்படியான முதலீடுகளால் நன்மை பெறப்போவது முதலீட்டாளர்கள் மட்டுமே ஒழிய நாமாக இருக்க மாட்டோம். சில சமயங்களில் அத்தகைய முதலீடுகளால் எமக்குத் தொழில் வாய்ப்புகள் மட்டும் இருக்கும். எமது நாட்டு முதலாளிகள் சிலர் சர்வதேச முதலீட்டா ளர்களுக்கு வழங்குநர்களாக இருந்து பணத்தைச் சம்பாதிப்பர். அதுவும் சீன தேசத்து முதலீட்டா ளர்களைப் பொறுத்தவரை பெரும்பாலும் எல்லாவற்றையும், மக்கள் சக்திகள் உட்பட அனைத்தையும் இறக்குமதி செய்தே தமது பணிகளை முன்னெடுக்கிறார்கள். இதிலிருந்து சர்வதேசம் எம்மைத் தமது நலன்களுக்காகப் பயன்படுத்துவதும் அப்பட்டமாகத் தெரிகிறது.

இலங்கையை தொடர்ந்து ஓர் அழுத்தத்தில் வைத்திருக்க வேண்டிய தேவை சர்வதேசத்துக்கு உண்டு. அதுவும் சீனா போன்ற நாடுகள் அதையே தமது உச்ச பட்ச இராஜதந்திரமாகக் கருதுகின்றனர். எப்பவும், எதற்கும் இலங்கை தம்மிடம் கையேந்தி நிற்க வேண்டும் என்றும், தன்னிறைவை அடையக் கூடாது என்றும் தமது இராஜதந்திர நகர்வைச் செய்து கொண்டிருக்கின்றனர். எனவே ஐ.எஸ். போன்ற பயங்கரவாதத்தை வளர்ப்பதிலும் சர்வதேசம் மறைமுகமாக இருப்பதாகவும் சந்தேகம் எழுகிறது.

எனவே தற்போதைய அரச ஆட்சியாளர்களும், எதிர்கட்சியினரும், சகல அரசியல்வாதிகளும் இவற்றை மனதிற்கொண்டு செயற்படாது போனால் நாடு பட்டினியில் ஒரு சோமாலியாவாகவும், பயங்கரவாதத்தில் கியூபாவாகவும் மாறிவிடுகின்ற நிலைமை வெகு தூரத்தில் இல்லை. எமது அரசியல்வாதிகள் இதை உணர்ந்து செயற்படுவார்களா? பயங்கரவாதத்துக்கு எதிராகத் தக்க விசாரணை நடத்தி அதனை இல்லாதொழிக்க முயற்சிப்பார்களா?

# வெளிநாட்டு அகதிகளுக்கு வவுனியாவில் இடமா...?



தமிழின அழிப்பு போர் நிறைவடைந்து 10 வருடங்கள் கடந்துள்ள போதும், போரால் பாதிக்கப்பட்ட மக்கள் தமது சொந்த நிலங்களில் மீளக்குடியேற முடியாது நில மீட்பு போராட்டத்தில் ஈடுபட்டுவரும் நிலையில், இலங்கையில் தஞ்சமடைந்துள்ள வெளிநாட்டு அகதிகளை வட மாகாணத்தில் தங்கவைக்கும் திட்டத்திற்கு தொடர்ந்தும் ஒரு பகுதியினரால் கடும் எதிர்ப்பு வெளியிடப்படுகின்றது.

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் அகதிகளை வவுனியா பூந்தோட்டம் முகாமில் தங்கவைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நகரசபை மண்டபத்தில் கடந்த புதன்கிழமை கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இதன்போது, அந்த அகதிகள் வவுனியாவில் இருந்து வெளியேற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கை அடங்கிய மாவட்ட அதிபருக்கான மகஜர் மேலதிக அரச அதிபர் தி.திரேஷ்குமாரிடம் கையளிக்கப்பட்டது.

ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து அகதிகளான நிலையில் இலங்கையில் தஞ்சமடைந்தோர் நீர்கொழும்பில் தங்க வைக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதல்களை அடுத்து அவர்கள் தங்குவதற்கு இடமின்றி கடும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளனர்.

இதனையடுத்து, கடந்த மாதம் 23 ஆம் திகதி தமக்கு பாதுகாப்பு வழங்குமாறு கோரி நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் தஞ்சமடைந்த சுமார் 550 பேரை பஸ்யால அஹமதியா முஸ்லிம் சமூக நலன்புரி நிலையத்திற்கு அனுப்பி வைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்ட போதும், மக்களின் எதிர்ப்பினால் அந்த நடவடிக்கை கைவிடப்பட்டது.

இதனையடுத்து குறித்த அகதிகளை தமிழர் தாயகமான வட மாகாணத்தின் வவுனியாவில் குடியேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் உட்பட தமிழ் மக்கள் பலரும் கடும் எதிர்ப்பு வெளியிட்ட போதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மற்றும் இலங்கை ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட வடமாகாண ஆளுநர் சுரேன் ராகவன் ஆகியோர் ஆதரவு வழங்கினர். அத்துடன் இந்த விடயம் தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன கடந்த 8 ஆம் திகதி வவுனியாவுக்கு சென்று அங்கு சென்று கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.

இதனையடுத்து கடந்த 17ஆம் திகதி பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் அகதிகள் சிலர் வவுனியா பூந்தோட்டம் முகாமிற்கு அனுப்பப்பட்டனர்.

இவர்களில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 6 பேரை தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் ரட்ணஜீவன் ஹூல் பொறுப்பேற்று யாழ்ப்பாணத்திற்கு அழைத்துச் சென்றார்.

எனினும் ரட்ணஜீவன் ஹூலின் இந்த நடவடிக்கை தவறானதெனவும், தனிப்பட்ட ஒருவர் அகதிகளை வீட்டில் தங்க வைப்பதால் சமூகப் பிரச்சினைகள் எழக்கூடிய வாய்ப்பு இருப்பதாகவும், எனவே உடனடியாக அவர்களை மீண்டும் வவுனியாவுக்கு அனுப்பிவைக்குமாறு வட மாகாண ஆளுநர் மற்றும் பொலிஸார் தெரிவித்ததை அடுத்து அவர்கள் உடனடியாக மீண்டும் வவுனியாவுக்கு அனுப்பப்பட்டனர்.

எனினும் இந்த அறிவுறுத்தல்களை ஏற்க முடியாது என ரட்ணஜீவன் ஹூல் கடந்த செவ்வாய்க்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்திருந்தார்.

இவ்வாறான நிலையில், அதே நாளில் குறித்த வெளிநாட்டு அகதிகள் தங்கவைக்கப்பட்டுள்ள வவுனியா - பூந்தோட்டம் முகாமிற்கு செல்ல முற்பட்ட தேரர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த அகதிகளை வவுனியா - பூந்தோட்டம் முகாமில் தங்க வைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, வவுனியா நகரசபை மண்டபத்தில் கடந்த புதன்கிழமை கலந்துரையாடலொன்றும் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது.

இந்தக் கலந்துரையாடலைத் தொடர்ந்து, வெளிநாட்டு அகதிகள் வவுனியாவில் இருந்து வெளியேற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கை அடங்கிய மகஜரை கையளிக்கும் நோக்கில், நகரசபை உறுப்பினர்கள் வவுனியா மாவட்ட செயலகத்திற்கு சென்ற போதிலும் அங்கு அரசாங்க அதிபர் இல்லாத காரணத்தினால் மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஷ்குமாரிடம் மகஜரைக் கையளித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து வவுனியா - மன்னார் பிரதி பொலிஸ் மா அதிபரிடம் மகஜரை கையளிப்பதற்காக சென்ற போதும், பிரதி பொலிஸ் மா அதிபர் அங்கிருக்காதமையினால் மற்றுமொரு அதிகாரியிடம் மகஜரை கையளித்ததாக உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை நகரசபை எல்லைக்கு உட்பட்ட அகதிகள் தங்கவைக்கப்பட்டுள்ள வவுனியா - பூந்தோட்டம் முகாமிற்கு சென்ற உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட குழுவினருக்கு முகாமிற்குள் செல்வதற்கு அனுமதி வழங்கப்படவில்லை எனவும், அங்கு அதிகளவிலான இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்ததுடன் வீதிக்கு குறுக்காக லொறியொன்றும் நிறுத்தப்பட்டிருந்ததாக உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

தற்போது வவுனியாவில் தங்கவைக்கப்பட்டுள்ள அகதிகளை அங்கு குடியேற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போது, இந்த நடவடிக்கைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கடும் எதிர்ப்பினை வெளியிட்டிருந்தார்.

வடமாகாணத்தில் குறிப்பாக வவுனியா மாவட்டத்தில் மாத்திரம் அகதிகளைத் தங்கவைப்பதனை ஏற்றுக்கொள்ள முடியாதென வலியுறுத்திய அவர், இலங்கையின் ஏனைய பாகங்களில் அகதிகளைத் தங்கவைக்காமை ஏன் என்று கேள்வி எழுப்பியிருந்தார்.

அத்துடன் கடந்த 10 வருடங்களாக தமது சொந்த நிலத்தை இலங்கை இராணுவத்திடமிருந்து மீட்டுத்தருமாறு வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டுவரும் தமிழ் மக்கள் குறித்து அலட்டிக் கொள்ளாத ஒற்றையாட்சி அரசாங்கம், வெளிநாட்டு அகதிகளை தமிழர் தாயகத்தில் குடியேற்றுவதற்கு முனைப்புடன் செயற்படுவது ஏன் எனவும் கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தனது ருவிட்டர் பக்கத்தில், எனது தமிழ் சகோதரர்களுக்கு மீண்டும் ஒரு கோரிக்கை. இதை நாம் தான் கூடுதலாக விளங்கிக் கொள்ளலாம். எமது மக்கள் இலங்கையில் துன்புறுத்தலுக்கு அஞ்சி பல நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளார்கள். எம் வாசற்படியிலிருந்து இந்த ஏதிலிகளைத் துரத்தி நன்றி கெட்ட சமூகம் என்ற பெயரைப் பெற்றுக் கொள்ளாதீர்கள் எனத் தெரிவித்து குறித்த அகதிகளைக் குடியேற்றும் நடவடிக்கைக்கு ஆதரவு வழங்கியிருந்தார்.

எனினும் இலங்கை ஜனாதிபதியின் சட்டத்தரணி சுமந்திரன் கடந்த 10 வருடங்களாக நிலமீட்பு போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்கள் மீது காட்டாத கரிசனையை இந்த வெளிநாட்டு அகதிகள் மீது காட்டுவது ஏன் என சமூக ஆர்வலர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

எது எவ்வாறிருப்பினும், கடந்த 30 வருடத்துக்கும் மேலாக போரால் பாதிக்கப்பட்ட மக்களது காணிகள் இலங்கை இராணுவத்தினாலும், இலங்கையின் பெரும்பான்மை இனத்தவர்களாலும் அபகரிக்கப்பட்டு வருவதனால் தமிழ் மக்கள் ஏதிலிகளாகவே உள்ள நிலையில், தமிழ் மக்களது பகுதிகளில் வெளிநாட்டு அகதிகளை தங்கவைப்பது தமிழர் தாயகத்தில் தமிழர்களது இருப்பை மேலும் கேள்விக்கு உள்ளாக்கும் செயற்பாடாகவே நோக்கப்படுகின்றது.

■ நா.யோகேந்திரநாதன்

# நீந்திக் கடந்த நெருப்பாறு 78

நன்றி தமிழ்லீடர் – அவுஸ்ரேலியா

பாம்பு பங்கர்கள் அமைக்கும் பணியில் மட்டுமே களமுனைப் போராளிகள் ஈடுபட்டிருந்தனர். சமரின் ஏனைய திட்டங்கள், நெறிப்படுத்தல்கள் எல்லாமே சிங்காரம் மாஸ்ரரின் சிறப்புப் படையணியின் மூலம் தலைவர் தொலைத்தொடர்பு ஊடாக களமுனையை நேரடியாக வழிநடத்தியிருந்தார். அன்று காலை சிறப்புப் படையணி வந்திறங்கியபோது களமுனைத் தளபதிகள் உட்பட எவருக்குமே ஏன் வந்தார்கள், என்ன செய்யப் போகிறார்கள் என்பது தெரிந்திருக்கவில்லை.

எனினும் ஒருங்கிணைப்புத் தளபதியிடமிருந்து களமுனை அணிகளைத் தயார் நிலையில் வைத்திருக்கும்படி மட்டும் கட்டளை வந்திருந்தது. சிவம், மங்களா, சுகுணன் ஆகியோர் தங்கள் அணிகளைத் தயார் நிலையில் வைத்திருந்தனர். வெள்ளாங்குளம் பக்கமாக வெடியோசைகளும் குண்டுச் சத்தங்களும் கேட்டபொழுது எந்த நிமிடமும் தங்களுக்கு அழைப்பு வரக்கூடும் என அவர்கள் எதிர்பார்த்துக் காத்திருந்தனர். ஆனால், மாலை வரை எந்த ஓர் அழைப்பும் வரவில்லை. சிவத்தினாலோ ஏனைய போராளிகளினாலோ என்ன நடந்தது என்பதை ஊகிக்கமுடியவில்லை.

தாக்குதலில் கலந்துகொண்ட போராளிகளுடன் உரையாடிய போது சிவத்தால் நடந்த விஷயங்களை அறிந்துகொள்ள முடிந்தது. அவர்களுக்குக்கூட களத்தில் இறக்கப்படும் வரை தாங்கள் எங்கு கொண்டு செல்லப்படுகிறார்கள் என்பதே தெரிவிக்கப்படவில்லையாம். மூன்றுமுறிப்பு முகாம் தாக்குதல் பெரும் துரோகத்தால் முறியடிக்கப்பட்ட நிலையில் இத்தாக்குதல் மிகவும் இரகசியமாகப் பேணப்பட்டுள்ளது என்பதைச் சிவம் புரிந்துகொண்டான்.

இப்பெரும் வெற்றி காரணமாக போராளிகள் மத்தியில் எல்லையற்ற மகிழ்ச்சியும் புதிய உற்சாகமும் தோன்றிவிட்டன. எனினும் சிவத்தைப் பொறுத்தவரையில் தான் இப்படி ஒரு தாக்குதலில் பங்குகொள்ள முடியாமல் போனது மனதை நெருடத்தான் செய்தது. சிவம் ஓர் இடத்தில் அமர்ந்திருந்து சட்டைப் பையில் எஞ்சியிருந்த கண்டோசை உரித்து வாயில் போட்டபோது மலையவன் அங்கு வந்து சேர்ந்தான்.

“அண்ணை முள்ளிக்குளத்திலையிருந்து இலுப்பைக்கடவை வரைக்கும் எவ்வளவு சண்டையைப் பிடிச்சிருப்பம்... இப்ப பாத்தியளே... அண்ணை நேரடியாய் நெறிப்படுத் தின சண்டையிலை மட்டும் எங்களை கழிச்சு விட்டிட்டினம்”, என்றான் ஒருவித கொதிப்புடன்.

சிவம், “இல்லையடாப்பா... எங்களுக்கு ஏதோ பெரிய வேலை தரப்போகினம். அதுக்காக ஒய்வு தந்திருக்கினம்”, என்றான்.

மலையவன் அவசரமாக,



“இல்லை... இல்லை... மூண்டுமுறிப்புத் தோல்வியோட அண்ணை எங்களிலை நம்பிக்கை இழந்திட்டார்”, எனக் கொதித்தான்.

“தம்பி, அண்ணை ஒருநாளும் போராளியளிலை நம்பிக்கை இழக்கிறேல்லை. மூண்டுமுறிப்புத் தோல்விக்குக் காரணமான துரோகியைக் கண்டுபிடிக்கும் வரை ஒவ்வொரு விஷயமும் இரகசியமாகவும் எதிர்பாராத விதமாயும்தான் செய்யவேணும். நாங்கள் இஞ்சை ஓய்வெடுக்கிற நேரம், இன்னுமொரு அணி இரகசியமாய் இறங்கித் தாக்குதலை நடத்தேக்கை எதிரிக்குத் தகவல் போக வாய்ப்பில்லை. இந்தக் களத்திலை நாங்கள் மூண்டு அணிகளும் பிரதான தாக்குதல் அணியளாய் இருக்கிற காரணத்தால துரோகி எங்கடை நகர்வுகளைத்தான் அவதானிப்பான்” சிவத்தின் அந்தப் பதிலில் மலையவன் திருப்பதியடைந்திருக்க வேண்டும்.

“இப்பிடி ஒரு பிரச்சினை இருக்கெண்டு நான் நினைக்கேல்லை அண்ணை” என்றான் அவன்.

அந்த இடத்துக்கு மங்களாவும் ரூபாவும் வந்தார்கள். “ஆணும் பெண்ணும் சமம் எண்டு வசனம் பேசுவியள் பொறுத்த நேரத்திலை வழக்கமான ஆம்பிளைப் புத்தியைக் காட்டிப் போடுவியள் என்ன?”, எனச் சிடுசிடுத்தாள் மங்களா.

“ஏன் என்ன நடந்தது?”, எனச் சர்வசாதாரணமாகக் கேட்டான் சிவம்.

“இண்டையான் சண்டையிலை ஒரு பெட்டையைக் கூடிச் சேர்க்கேல்லை! பொம்பிளையள் எண்டால் சக்கட்டையே?”,

சிவம் பெரிதாகச் சிரித்துவிட்டான். பின்பு, “ஐயோ சிங்காரம் மாஸ்ரரின்ரை படையணியிலை மகளிர் இல்லை”, என்றான் அவன்.

“ஏன் எங்களையும் சேர்த்திருக்கலாம்தானே?”, எனப் பாய்ந்து விழுந்தாள்.

சிவம் நிதானமாக நிலைமையை விளங்கப்படுத்தினான். மங்களா சிவம் சொன்னவற்றைக் கேட்டு சமாதானமடைந்த போதிலும், “எல்லாம் சரிதான் ஆனால் எங்களுக்கு எவ்வளவு கவலையாய் இருக்குது தெரியுமே?”, என்றாள்.

மலையவன் கேலியாக, “ரூபாக்கா! நீங்கள் கணேசண்ணையைக் கைவிட்டிட்டு மங்களாக் காட்டை பாரம் குடுங்கோ. குதிக்கவும் கொதிக்கவும் நலல சோடி”, என்றுவிட்டு மங்களாவை விட்டு சற்று விலகி நின்றான்.

“டேய் மலையாண்டி மாமா! எனக்கு மாப்பிள்ளையே தேடுறாய்... நான் உன்னைத்தான் கட்டுறது... கட்டி இருத்தி எழுப்புவன்”, என்றாள்.

“நான் ஒரு பொம்பிளையைத் தான் கட்டுவன்”, என்றுவிட்டு அந்த இடத்தைவிட்டு ஓடிவிட்டான் மலையவன்.

● ● ●

பல்லவராயன்கட்டில் பரமசிவம் குழுவினர் சமையலை முடிக்க நேரம் நான்கு மணியைத் தாண்டிவிட்டது. அனைவருக்கும் உணவு பரிமாறி முடித்துவிட்டுப் பெண்களும் சாப்பிட ஆரம்பித்தனர். மதிய உணவும் இரவு உணவும் சேர்த்து அந்த இடத்திலேயே சாப்பிட்டு முடிக்கப்பட்டு விட்டது. எஞ்சிய பகுதியை பார்வதி ராமுவுக்கும் வேலுப்பிள்ளையின் இரு பிள்ளைகளுக்கும் கொடுக்கவென எடுத்து மூடி வைத்துக்கொண்டாள்.

அவர்கள் வீதி நிறைந்த சனங்களுக்குள்ளால் வண்டிலையும் லான்ட்மாஸ்டரையும் ஓட்டிவர மிகவும் சிரமப்பட்டனர். அதைவிடப் பின்னால் ஊர்ந்துவரும் உழவுயந்திரங்களுக்கு வழிவிட வேண்டியிருந்தது. நின்றும் மெல்லமெல்ல நகர்ந்தும் பல்லவராயன்கட்டுக்கு வந்துசேர நேரம் இரண்டு மணியைத் தாண்டிவிட்டது.

ஏற்கனவே சுந்தரமும் முத்துவும் வந்து கோவிலடியில் ஓர் இடம் தேட முயற்சித்தபோதும் முடியவில்லை. அந்த இடம் ஏற்கனவே மக்களால் நிரம்பி வழிந்தது. சற்றுத் தொலைவில் நின்ற ஒரு பெரிய பாலை மரத்தின் கீழ் இடத்தைத் தெரிவுசெய்து அதை இருவரும் சுத்தப்படுத்தனர். பெரிய பற்றைகள் எதுவும் இல்லாத போதிலும் செடிகளையும் புற்களையும் செருக்கவேண்டியிருந்தது.

புற்களைச் செருக்கிக் கொண்டிருக்கும்போதுதான் சற்றுத் தொலைவில் ஒரு ஆளுயரத்துக்கு வளர்ந்திருந்த பாம்புப் புற்றை முத்து கவனித்தாள். அவள் சுந்தரத்தை அழைத்து கையை நீட்டி அதைக் காட்டினாள்.

“ஏய் பாம்புக்கு விரல் நீட்டிக் கை காட்டக்கூடாது எண்டு உனக்குத் தெரியாதே?”, எனக் கேலியாகக் கடிந்துகொண்டான் சுந்தரம்.

“அது பாம்பில்லை... பாம்புப் புத்து”, என்றாள் முத்தம்மா.

“பாம்போ... புத்தோ எண்டு இரவுக்கு தலைமாட்டிலை வந்து படமெடுக்கேக்கை தெரியும்”

“ஐயோ அப்ப... வேற இடம் பாப்பம்”, என்றாள் அவள் பயத்துடன்.

“தேவையில்லை நீ எனக்குப் பக்கத்திலை படுத்தியெண்டால் பாம்பு கிட்டவே வராது”, எனச் சிரிப்புடன் சொன்னான் சுந்தரம்.

“அப்பிடியே?”, எனக் கேலியாகக் கேட்டுவிட்டு. “அதிலும் பாக்க நான் பாம்புப் புத்துக்கு மேலையே போய்ப் படுப்பன்”, என்றாள்.

“அப்ப... நான் பாம்பை விட ஆபத்தானவனே?”

“ஆபத்தில்லை...”, என்று இழுத்து கதையை மழுப்பினாள்.

(நெருப்பாற்றில் நீந்துவோம்)



## தங்க சட்டகத்துக்குள் துபாய்

எண்ணெய் தரும் பணத்தில் எண்ணதில் எழுவதையெல்லாம் செய்து விடலாம் போலிருக்கின்றது. வளைகுடா நாடுகளில் அசுர வளர்ச்சியைக் கண்டுவரும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ், புதிய சாதனைகளைப் படைத்து வருகிறது.

ஆனால், இந்தத் தடவை உலகின் மிகப்பெரிய சட்டகத்தை உருவாக்கிய துபாய் சாதனைப் பட்டியலில் இடம் பிடித்துள்ளது. துபாயின் ஜபீல் பூங்கா அருகே செவ்வக வடிவிலான பிரமாண்ட புகைப்பட சட்டகம் போன்று 'துபாய் பிரேம்' Dubai Frame என்ற கட்டுமானத்தை காணமுடியும்.

இந்த சட்டகம், 25 கோடி திர்ஹம் - சுமாராக நம் நாட்டு மதிப்பில் 1,197 கோடி ரூபா செலவில் 492 அடி உயரமும், 305 அடி அகலமும் கொண்டதாக உருவாக்கப்பட்டது. தொலைவில் இருந்து பார்த்தால் ஒரு புகைப்பட சட்டகத்திற்குள் துபாய் நகரம் உள்ளது போன்று தெரியும் வகையில், இந்த கட்டுமானம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தங்க நிற தகடுகளால் அலங்கரிக்கப்பட்டுள்ள கட்டுமானம், நடைமேடை, 'லிப்ட்' வசதியும் கொண்டுள்ளது. கடந்த ஆண்டுதிறக்கப்பட்ட துபாய் பிரேம் உலகின் மிகப்பெரிய சட்டகமாக கின்னஸ் சாதனை பட்டியலில் இடம் பிடித்துள்ளது.

**சட்டகத்துக்குள் ஒரு நகரமே தெரிகிறது...!**

## அலங்கார சவப்பெட்டிகள்



எகிப்தின் தலைநகர் கெய்ரோ அருகே சுமார் 4,500 ஆண்டுகள் பழமையான கல்லறை தோட்டம் ஒன்றை தொல்லியல் துறையினர் கண்டுபிடித்துள்ளனர். இந்தக் கல்லறை தோட்டத்தில் அந்தக் கால மன்னராட்சியில் முக்கிய பொறுப்புகள் வகித்த பெனுய் கா மற்றும் நிவை ஆகிய இருவரின் கல்லறைகள் உள்பட பல்வேறு காலகட்டங்களில் உயிரிழந்தவர்களின் கல்லறைகளும் இடம்பெற்றுள்ளன எனஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

மேலும், இந்த பழமையான கல்லறை தோட்டத்தில் அலங்கரிக்கப்பட்ட சவப்பெட்டிகள், சுண்ணாம்பு கற்களால் செய்யப்பட்ட ஒரே குடும்பத்தின் சிலைகள் மற்றும் விலங்குகள் உருவம் ஆகியவை கண்டறியப்பட்டுள்ளன என்றும் கூறப்பட்டது.

**அன்றைய ஆட்சியாளர்களும் செல்வச் செழிப்பில் வாழ்ந்திருக்கிறார்கள்....**

# வேகம்... அதிவேகம்...!

ஜப்பான் ரயில்வே அல்பா எக்ஸ் (ALFA-X) என்ற பெயரில் புதிய அதிவேக ரயிலை இயக்கவுள்ளது. இந்த ரயிலின் பத்து பெட்டிகளுடனான நீண்ட மூக்குப் பகுதி 72 அடி நீளத்துக்குஉள்ளது. காற்றைக் கிழித்துக் கொண்டு வேகமாகச் செல்ல உதவும் வகையில் இந்த அமைப்பு இருக்கிறது.

தலைநகர் டோக்கியோவில் இருந்து சென்டாய் மற்றும் ஓமோரி ஆகிய நகரங்களுக்கு இடையே சோதனை ஓட்டம் நடத்தப்பட்டது. மணிக்கு 400 கி.மீ. வரை செல்லும் ஆனால் பயணிகளை ஏற்றிச் செல்லும்போது, மணிக்கு 360கி.மீ. வேகத்திலேயே இது செலுத்தப்படும்.

ஜப்பானிய மொழியில் இந்த அதிவேக ரயில்கள் "ஷிங்கன்ஸ ன்" என அழைக்கப்படுகின்றது. பிரதான ரயில் நிலையங்களில் மாத்திரமே நிறுத்தப்படும் இந்த அதிவேக ரயில், சுப்பர் எக்ஸ்பிரஸ் என்றும் அழைக்கப்படுகின்றன. 2020ஆம் ஆண்டு டோக்கியோ ஒலிம்பிக் போட்டியை நடத்துவதை முன்னிட்டு ஜப்பான் பல்வேறு போக்குவரத்து வசதிகளை புதிதாக உருவாக்குகிறது.



ஆனால், 2030ஆம் ஆண்டுதான் இந்த ரயில் பயன்பாட்டுக்கு வரும் எனக் கூறப்படுகிறது.

**எதிலும் வேகம் எங்கும் வேகம்...!**

## வேகமாகப் பறக்கும் கார்

5 இருக்கைகள் கொண்ட, பற்றரி மூலம் இயங்கும் பறக்கும் காரை ஜேர்மனியை சேர்ந்த 'எயார் ரக்ஸி" நிறுவனம் வெற்றிகரமாக சோதித்துள்ளது. வளர்ந்த மற்றும் வளர்ந்து வரும் அனைத்து நாடுகளிலும் வாகனங்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகி வரும் நிலையில், போக்குவரத்து நெரிசல் முக்கிய பிரச்சினையாகி விட்டது.

இதை அவதானித்த, ஜேர்மனியை சேர்ந்த 'எயார் ரக்ஸி" நிறுவுனரான லில்லியம், பறக்கும் காரை 2025ஆம் ஆண்டுக்குள் போக்குவரத்து சேவைக்கு அறிமுகப்படுத்தும் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. இந்த நிலையில் பறக்கும் காரை அந்நிறுவனம் வெற்றிகரமாக சோதித்துள்ளது.

'லில்லியம் ஜெட்" எனப் பெயரிட்டுள்ள இந்த பறக்கும் கார் 'ரிமோர்ட் கொண்ட்ரோல்' மூலம் இயங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள பற்றரி தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இந்த பறக்கும் கார் மணிக்கு 300 கிலோ மீற்றர் வேகத்தில் பறக்கவல்லது என அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

**காலத்திற்கு ஏற்ற கோலம்...!**





## பேரழிவின் பிடியி உயிர்கள்...!

உலகம் முழுவதும் பத்து லட்சம் உயிரினங்கள் அழிவின் விளிம்பில் உள்ள என ஐ.நா.வின் ஆய்வில் தெரியவந்துள்ள ஐக்கிய நாடுகள் சபை சார்பில் அமெரிக்காவைச் சேர்ந்த குழு 50 நாடுகளி 145 வல்லுநர்களைக் கொண்டு பல்லுயிர் பெருக்கம் குறித்து நடத்திய ஆய்வின் அறிக்கை வெளியானது. இதில், வரலாற் இதுவரை இல்லாத அளவுக்கு மனிதர்கள் இயற்கையை நாசம் செய்துள்ளனர் என்று தாவரங்கள், விலங்குகள், பறவைகள், கடல்வாழ் உயிரினங்கள் என 10 லட்சம் உயிரினங்களை அழிவின் பிடியில் உள்ள என்றும் கூறப்பட்டுள்ளன.

இதில், மிக அரிய உயிரினங்களான சுமத்திரா காண்டாமிருகம், ரிட்டிகா நீர் தவளை, டாபிர், றோயல் ஆமை, சிஃ பாகா குரங்கு, பிலிப்பியன் கழுகு, கறுப்புக் கொண்டை குரங்கு உள்ளிட்ட இனங்கள் வேகமாக அழிந்து வருகின்றன எனத் தெரியவந்துள்ளது. மூன்றில் ஒரு பங்கு பாலூட்டிகள், 40வீதமான நீர்நில வாழ் இனங்கள், 33 வீதமான பவளப்பாறைகள் வாழ் இனங்கள் விரைவில் அழிந்துபோகு நிலையில் உள்ளன.

காடுகளை அழித்தல், நீர் நிலை மற்றும் நில ஆக்கிரமிப்பு, மட்காத பொருட்களின் பயன்பாடு, புவி வெப்பமயமாதல் எனப் பல காரணிகள் இதற்கு காரணம். ஆனால் இவற்றுக்கெல்லாம் வழிசமைத்தது மனித

**அழகிய இயற்கை சிதைக்கப்படுகின்றது**

# ஆரிட்டை சொல்லி அழ?



## இது நாட்டு நடப்பைப் பற்றிய ஒரு (வி)சித்திரத் தொடர்

## சட்டியில் இருந்தால்தானே அகப்பேக்கை வரும்?

போன செவ்வாய்க்கிழமை ஒரு செய்தியைப் பாத்தன். இன்று காலை பள்ளிக்கூடம் போன மஹிந்தா எண்டு கிடந்திது. நான் வாசிக்கேக்கை அருகிலை நிண்ட ஒண்டு தன்ரை தலையை ஒட்டிப் பாத்திட்டுப் பெரு மூச்சுவிட்டாப்போலை அவனைப் பாத்துக் கேட்டன் "ஏன்ரா பெருமூச்சு விடுகிறாய்" எண்டு...

அண்ணை மஹிந்தா பள்ளிக் கூடம்போனவர் எண்டு போட்டுக் கிடக்கு. அப்ப இத்தினை நாளும் அவர் பள்ளிக்கூடம் போகமலே ஜனாதிபதியா இருந்தவர்? எண்டு அவன் கேட்டான். பிறகு சொன்னான் இப்ப அடுத்த முறை பிரதமராக வாறதுக்கு இருக்கிறார். அதுக்கு முன்னமாவது பள்ளிக் கூடம் போக யோசிச்சாடீரே. பறவாயில்லை எண்டும்" சொல்லிச் சந்தோஷப்பட்டான்.

அவன் அந்தச் செய்தித் தலைப்பைப் பற்றி பிழையா எண்ணீட்டான் எண்டு நினைக்காதையுங்கோ. ஏனெண்டால் பார்லிமெண்டிலை இருக்கிற கன ஆக்கள் செவ்வயாப் பள்ளிக் கூடத்துக்குப் போகேல்லையாம். இதை முன்னமும் ஒருக்காப் பேப்பரிலை போட்டவங்கள். ஜனநாயகம் ஜனநாயகம் எண்டு சொல்லிக் கொண்டு படிக்காத ஆக்களையும் வோட்டைப் போட்டுப் பார்லிமெண்டுக்கு அனுப்பிறதாலை வாற சீரழிவுகளைப் பாக்கிறமெல்லே. சட்டியிலை இருந்தால்தானே அகப்பையிலை வரும். 'அப்ப படிச்சு மூளைக்கை ஏதாவது இருந்தால்தானே நடைமுறையிலை என்ன இருக்கு? சட்திட்டத்திலை என்ன இருக்கு? எண்டு பாத்துச் சனத்துக்கு ஏதாச்சும் நன்மை செய்யலாம். இது படிப்பில்லாமை என்னத்தைச் செய்யலாம்...?

ஆனால் படிச்சா ஆக்களும் இப்ப படிக்காதவைமாதிரித்தான் நடக்கினம். அதுக்கு உதாரணத்தைச் சொல்லவே? வட மாகாண நிர்வாகத்திலை இருக்கிற ஆக்களைப் போய்ப் பாருங்கோ. அரைவாசி தங்கடை தங்கடை கதிரையைக் காப்பாற்ற வேணும் எண்டதிலை கரிசனையா இருக்கினமே ஒழிய, சனத்தின்ரை முன்னேற்றத்திலை அக்கறைப்படுகிற ஆக்களாத் தெரியேல்லை. அதோடை படிச்சவையளும் சட்டத்திலை என்ன என்ன ஓட்டையள் இருக்கெண்டு பாத்துத் தாங்கள் தப்புவ மெண்டதுக்குப் படிப்பைப் பாவிக்கினமே ஒழிய அந்தப் படிப்பை வைச்சுப் பிறருக்கு ஏதாச்சும் செய்வம் எண்டு யோசினையோடை இல்லை.

றோட்டுலை நிக்கிறதொண்டு இதைக் கேட்டிட்டு என்ன சொல்லுது தெரியுமே? அண்ணை படிச்சவைதான் சாதிச்சதெண்டு சரித்திரம் இல்லை. படிக்காதவைதான் படிச்சவையைவிடக் கனக்கச் சாதிச்சிருக்கினம். ஆனால் ஒண்டு அப்பிடிப்பகட்டவை சொன்ன கதையள், அவையைப் பேப்பர் காரர் கண்ட நேர்முகம் எண்டதிலை அவை சொல்லி இருக்கிற விசியத்தைப் பாத்தீங்கள் எண்டால் அவையிட்டை பிறப்பிலையே படிப்பிருந்திருக்கு. அதோடை ஊருலகத்துக்கு நல்லது செய்ய வேணும் எண்ட கரிசனையும் இருந்திருக்கு. ஆராக இருந்தாலும் நல்ல பழக்க வழக்கம், பிறருக்கு உதவவேணும். குடுத்துத் தின்ன வேணும் எண்ட விசியங்கள் இரத்தத்திலை இருந்தால்தான் அது நடைமுறையிலையும் வரும்.

அதைத்தான் சட்டியிலை இருந்தால் தான் அகப்பையிலை வரும் எண்டு முன்னம் சொன்னனான். அப்ப புத்தகத்தைச் சப்பித் துப்பிப் போட்டுப் பேருக்குப் பின்னாலை நாலைஞ்சு எழுத்துக்களை வைச்சுக் கொண்டு கதிரையிலை இருக்கிறவையாளாலை பிரயோசனம் இருக்க வேணும் எண்டால் அவை சமூகத்துக்கை இறங்கி அனுபவப் படிப்பையும் படிக்க வேணும்.

**- கோளரங்கன்**

---

## ஓவியம்....

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரையிலும் படைப்புக்களையும், படைப்பாளிகளையும், ஓவியப் புரிந்துணர்வுகளையும் இணைத்து கருத்துக்களை அளித்துள்ளார்.

ஓவியமும், எழுத்தும் சமமாக இயங்குவது கடினம் என்பதையும் இந்நூலில் ஆசிரியர் கணபதி சுப்ரமணியம் கடந்துள்ளார். இவர் பல்வேறு தளங்களில் இயங்கிக் கொண்டிருந்த அனுபவத்தின் வழியே ஓவியத்துறை மீதான பேரார்வம் காரணமாக ஓவியத்தளத்தில் இயங்கி வருகிறார்.அவரது ஓவியங்கள் அருபத் தோற்றங்களைக் கொண்டிருந்தாலும், ஓவியத் தத்துவங்களையும், மனஎழுச்சியையும் உள்ளடக்கிய படைப்பாகக் காணப்படுகிறது. அவரின் கருத்தாக்க வெளி மிக வலிமையானது. அந்த முனைப்பில் ஓவியங்களை மட்டுமே தீட்டுவதோடு அல்லாமல் ஓவியக்கலை குறித்த விரிவான தேடல்களை இந்த நூலில் காணமுடிகிறது.

ஓவியக்கலையின் உள்ளீட்டு அக நிலையான திறனாய்வு, ரசனை, பொருள்செறிவு, வண்ண இலக்கணங்கள் போன்ற பார்வைகளின் தேவையையும் இந்த நூல் குறிப்பால் உணர்த்துகிறது. ஓவியக்கல்விக்குரிய தேவையைப் பூர்த்திசெய்யும் அளவிலும் இந்தத் தமிழ்நூல் பயன்படும். ஒரு கலை நீட்சிக்கப்படுவதும், போஷிக்கப்படுவதும், புதுப்பிக்கப்படுவதும் இயல்பு. ஆனால் பல தலைமுறைகளால் கலையாளப்பட்டாலும், தன்னைத்தானே புதுப்பித்துக்கொண்டு மரபின் வேர்களின் அடையாளத்தை இழக்காது நிலைத்திருக்கும் தன்மைகொண்டது ஓவியக்கலை என்பதை இந்த நூல் மெய்ப்பிக்கிறது.

## அருளரின்....

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிடுவதும் இங்கு அவதானிக்கத் தக்கது. எனினும் இந்தநாவல் வாசகருக்கு இலங்கையில் தமிழர் வரலாறு, போராட்டம் தொடர்பான விரிவான தகவல்களைத் தருகின்றது என்ற ரீதியில் பார்க்கும் போது இக்கட்டுரைத் தன்மையைக் குறை கூறமுடியாதுள்ளது.

இனக்கலவரத்தில் நடைபெற்ற சம்பவங்கள் இந்தநாவலில் மிகைப்படுத்தப்படாது இயல்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மே 2019 நடுப்பகுதியில் இலங்கையில் குருநாகல், கம்பஹா மாவட்டங்களில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வன்முறைகளை தொலைக்காட்சி செய்திகளில் பார்த்தவர்களுக்கு அருளரின் 1977ஆம் ஆண்டு கலவரம் பற்றிய பதிவுகள் மிகைப்படுத்தப்படாதவை என்பது தெளிவாகும்.

2009 இல் முள்ளிவாய்க்காலில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட தமிழரின் விடுதலைப் போராட்டம் தோற்றம் பெற ஏதுவாக அமைந்த காரணிகளை இந்தநாவலின் ஊடாக அறிய முடிகின்றது. மேலும் இலங்கையில் தமிழர் விடுதலைப் பேர்ராட்டம் தொடர்பாக இந்தியஅரசின் அணுகுமுறை எப்படி இருக்கும் என்பதனை இந்த நாவல் தீர்க்கதரிசனமாகக் கூறியிருப்பதை எண்பதுகளில் இந்திய மத்திய அரசு இலங்கைத் தமிழர் தொடர்பாக எடுத்த நிலைப்பாடுகளை எழுபதுகளின் இறுதியிலேயே அருளர் தீர்க்கதரிசனமாக இந்தநாவலில் குறிப்பிட்டுள்ளார். முன்னாள் யாழ்ப்பாண மேஜர் அல்பிரட் துரையப்பாவின் கொலை, தியாகி சிவகுமாரன் என ஈழ விடுதலைப் போராட்டத்தின் முக்கிய மைல்கற்கள் இந்தநாவலில் பதிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பில் வாழ்ந்த பல்வேறு தரப்புக்களைச் சேர்ந்த தமிழர்களைப் பற்றியும் நாவலாசிரியர் தனது கதையோட்டத்தினூடாகச் சொல்கிறார். கப்பலில் பயணித்த 1200 பயணிகளில் சொத்துக்கள் அனைத்தையும் இழந்து பயணிப்பவர்களையும், அவசரத்தில் விலைமதிப்பான பொருட்களை மட்டும் கொண்டு வந்தவர்களையும் பெரியபெரிய சூட்கேசுகளிலும் சீலைப் பொட்டலங்களிலும் பொருட்களை எடுத்து வந்தவர்களையும் குறிப்பிடும் இந்தநாவல் அங்கதமாக பரபரப்பான நேரத்திலும் தனது செல்லப்பிராணியான நாயையும் கிளியையும் கூடக் கப்பலில் ஏற்றிவரும் பெல்பொட்டம் அணிந்த நங்கையையும் குறிப்பிடத் தவறவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளரான, தனது கடைகளை இழந்த தமிழ் முதலாளி இழப்பின் பின்னரும் அதே கட்சிக்கு ஆதரவாகக் கதைப்பதை வெளிப்படுத்துவதன் ஊடாக, அருளர் பெரும்பலான தமிழ் முதலாளிகளின் சுயநலப் போக்கினை படம் பிடித்துக் காட்டுகின்றார்.

இலங்கைத் தமிழரின் போராட்டத்தைப் பற்றிப் பேசும் ஆரம்பகால நாவல் என்ற ரீதியில் இந்நாவல் முக்கியத்துவம் பெறுகின்றதெனலாம். மொத்தத்தில் எடுத்து நோக்கும் போது இந்த நாவலானது 1977 இனக்கலவரம் தொடர்பான ஒரு முக்கிய இலக்கிய ஆவணமாகக் கொள்ளப்படத்தக்கது எனலாம்.

மன அழுத்தம் நிறைந்த பணிச்சூழல், தவறான உணவுப்பழக்கம், மாறிவிட்ட வாழ்க்கை முறை போன்றவை உடல் பருமனை அதிகரித்து, ஆண்களுக்கு மலட்டுத் தன்மையை ஏற்படுத்தி விடுகின்றன. கதிர்வீச்சு அதிகமுள்ள கைபேசிகள், மடிக்கணனி என அளவுக்கு அதிகமாக நவீன கருவிகளைப் பயன்படுத்துவதும் மலட்டுத்தன்மைக்குக் காரணமாகின்றன.

“மலட்டுத் தன்மைக்குப் பல்வேறு காரணங்கள் இருந்தாலும், இன்றைய தலைமுறையினரிடம் அதிகரிக்கும் தவறான உணவுப் பழக்கம்தான் முக்கிய காரணம். அது, ஆண்களின் பாலியல் ஹோர்மோனான “டெஸ்டோஸ்டீரான்’ சுரப்பை பாதித்து, தந்தையாகும் வாய்ப்பு குறையக் காரணமாக இருக்கிறது” என்கிறார் உணவு நிபுணர்கள். டெஸ்டோஸ்டீரான் ஹோர்மோனின் முக்கியத்துவம் பற்றியும், அதன் சுரப்பை அதிகரிக்க உதவும் உணவுகள் பற்றியும் விளக்குகிறார் அவர்.

“ஆண், பெண் இருவர் உடல்களிலும் டெஸ்டோஸ்டீரான் இருக்கிறது. இது, அட்ரீனலின் சுரப்பி மற்றும் விரைப்பைகளிலிருந்து சுரக்கிறது. பெண்களிடம் மிகவும் குறைவாகவும், ஆண்களிடம் அதிகமாகவும் காணப்படும் இந்த ஹோர்மோன்தான் ஆண்களுக்குத் தனித்துவமான குரலைத் தருகிறது. முகத்தில் தாடி, மீசையை வளரச் செய்கிறது. தலைமுடி வளரவும், விந்தணுக்களை உற்பத்தி செய்யவும் காரணமாகிறது. அதனால்தான் இந்த ஹோர்மோனை “ஆண் பாலியல் ஹார்மோன்’ என்கிறது மருத்துவம். ‘ஆணின் விந்தணு உற்பத்தி, தசை அடர்த்தி, எலும்புகளின் ஆரோக்கியம், இரத்தச் சிவப்பணுக்களின் உற்பத்தி போன்ற பல்வேறு பணிகளிலும் இது முக்கிய பங்காற்றுகிறது.

வயது அதிகரிக்கும்போது இந்த ஹோர்மோன் சுரப்பது குறையத் தொடங்கிவிடும். சிலருக்கு இளம் வயதில் தவறான உணவுப் பழக்கத்தைப் பின்பற்றுவதாலும் டெஸ்டோஸ்டீரான் சுரப்பது குறையத் தொடங்கும். இதனால், ஆண்களுக்கு விறைப்புத்தன்மை அடைவதிலும், விந்தணு உற்பத்தியிலும் குறைபாடு ஏற்பட்டு தாம்பத்ய உறவில் பிரச்சினை ஏற்படும். அத்துடன் எலும்பு மற்றும் தசைகள் வலிமை இழப்பது என வேறு பல பிரச்சினைகளுக்கும் வழிவகுக்கும்.

காபோஹைதரேற், கொழுப்பு, விற்றமின் டி, மக்னீசியம், துத்தநாகம் போன்ற சத்துகள் உள்ள உணவுகள் டெஸ்டோஸ்டீரான் சுரப்பை ஊக்கப்படுத்தும். அதிகப்படியான உடல் பருமன், அதிக மன அழுத்தம் போன்றவற்றால்



# ஆண்களுக்கு உரமூட்டும் உணவுகள்

இந்த ஹோர்மோன் சுரப்பு குறையும். குறிப்பாக, “கார்டிசால்’ ஹோர்மோனின் அளவு உடலில் அதிகரித்தாலும், இதன் அளவு குறைந்துவிடும். இதன் அளவை அதிகரிக்க உதவும் சில உணவுகளை ஆண்கள் அவசியம் சாப்பிட வேண்டும்.



**மாதுளை**

மாதுளையிலுள்ள அன்டிஒக்ஸிடன்ட் டெஸ்டோஸ்டீரான் உற்பத்தியை அதிகரிக்கும். மாதுளையை ஜூஸாக்கி அருந்துவதைவிட அப்படியே பழமாகச் சாப்பிடுவது நல்லது.

**மீன்**

மீன் உள்ளிட்ட கடல் உணவுகளில் ஒமேகா 3 கொழுப்பு அமிலம் மற்றும் விற்றமின் டி நிறைவாக உள்ளன. இவற்றை அடிக்கடிச் சாப்பிட்டு வரலாம்.

**சிட்ரஸ் பழங்கள்**

ஒரேஞ், திராட்சை, எலுமிச்சை போன்ற சிட்ரஸ் பழங்களை அடிக்கடி சேர்த்துக்கொள்ள வேண்டும். இவற்றிலுள்ள விற்றமின் சி மற்றும் ஒன்டிஒக்ஸிடன்ட் போன்றவை கார்டிசால் அளவைக் குறைத்து, டெஸ்டோஸ்டீரானை அதிகரிக்கச் செய்யும்.

**கீரை வகைகள்**

கீரைகளில் டெஸ்டோஸ்டீரானை அதிகரிக்கும் மக்னீசியம், அன்டிஒக்ஸிடன்ட் போன்றவை நிறைந்துள்ளன. எனவே, வாரம் இரண்டு முறையாவது கீரை உணவுகளைச் சாப்பிட வேண்டும்.

**பால்**

பாலில் கல்சியம் மட்டுமன்றி விற்றமின் டி சத்தும் அதிகம் உள்ளது. இதனால் எலும்புகள் வலிமையடையும் ஆண்களுக்கு ஏற்படும் ஆண்மைக் குறைபாடு நீங்கும்.

**பூசணி விதைகள்**

பூசணி விதைகளில் துத்தநாகச் சத்து நிறைந்திருக்கிறது. அவ்வப்போது இதை வறுத்தும் போலச் சாப்பிடலாம்.

**முட்டை**

முட்டையின் மஞ்சள் கருவில் விற்றமின் டி இருக்கிறது. இது டெஸ்டோஸ்டீரான் சுரப்பைத் தூண்டக்கூடியது. ஆண்கள் தினமும் ஒரு முட்டை சாப்பிடுவது நல்லது.

**நட்ஸ்**

பாதாம் போன்ற நட்ஸ் வகைகளில் துத்த நாகச் சத்து அதிகம் உள்ளது. அத்துடன் இவற்றிலுள்ள சச்சுரேட்டட், மோனோ அன்சாச்சுரேட்டடு கொழுப்புகள் டெஸ் டோஸ்டீரான் உற்பத்திக்கு உதவக்கூடியவை.

தினமும் 6 முதல் 8 மணி நேரத் தூக்கம், 30 நிமிட உடற் பயிற்சி, மூன்றரை லீற்றர் தண் ணீர் அருந்துதல், 20 நிமிடங் கள் சூரிய ஒளியில் நிற்பது போன்றவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும். துரித உணவுகள், பக்கெற்றுக்களில் அடைக்கப் பட்ட உணவுகளைச் சாப்பிடு வதைத் தவிர்க்க வேண்டும்.

## முஸ்லிம் தீவிர....

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நடவடிக்கைகளுக்கு முஸ்லிம் மக்கள் ஏராளமான தகவல்களை வழங்கி உதவியுள்ளனர். முஸ்லிம் மக்கள் மட்டுமன்றி நாட்டில் வாழும் ஒவ்வொருவரும் இந்த விசாரணைகளுக்கு ஒத்துழைப்பது அவசியமாகும்.

இதற்கு மாறாக குண்டுத் தாக்குதல் நடந்து மூன்று வாரங்களின் பின்பு நாடு முழுவது ஊரடங்கு சட்டம் போட வேண்டியளவுக்கு இனவெறித் தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டன. நீர்கொழும்பில் இடம்பெற்ற ஒரு சிறு சம்பவம் காரணமாக ஏற்பட்ட வன்முறை பொலிஸார் உரிய நேரத்தில் தலையிட்டபடியால் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டு விட்டது பின்பு மதத் தலைவர்கள் தலையிட்டு இரு பக்கத்தினரையும் சமாதானப்படுத்தி பிரச்சினையைச் சுமுகமாக முடிவுக்கு கொண்டு வந்தனர்.

இதனையடுத்து புத்தளத்தில் முஸ்லிம் மக்கள் மீது ஆரம்பித்த தாக்குதல் நடவடிக்கை கள் வடமேல் மாகாணத்தில் பல இடங்களிலும் பரவி குழப்பமான நிலையை ஏற்படுத்தியது. முஸ்லிம் மக்களுக்குப் பாதுகாப்பற்ற ஒரு நிலை உருவானது. ஊரடங்குச் சட்ட நேரத்திலும் தாக்கதல்கள் இடம்பெறுமளவுக்கு நிலைமை மோசமடைந்தது. மொத்தமாக 27 பள்ளிவாசல்களும், அறநெறிப் பாடசாலையும் தாக்கப்பட்டன. பல கடைகள், வாகனங்கள், குடியிருப்புகள் அடித்து நொருக்கியும் எரியூட்டப்பட்டும் சேதமாக்கப்பட்டன. சில இடங்களில் பொலிஸார் பார்த்துக் கொண்டு நிற்கவே தாக்குதல்கள் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது. மினுவாங்கொடையில் இராணுவத்தினர் தாக்குதல்களுடன் சேர்ந்து தாக்குதலில் ஈடுபட்டதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன.

இப்படியான நடவடிக்கைகளை ஏற்றுக் கொள்ள முடியுமா? இவற்றால் நாட்டில் அமைதியையும், சமாதானத்தையும் கட்டி வளர்க்க குண்டு வெடிப்பு இடம் பெற்றவுடன் இப்படியான வன்முறைகள் ஏற்பட்டிருந்தால் மக்கள் ஆத்திரத்தில் தாக்குதல்களில் இறங்கினார்கள் என்றும் சொல்லலாம். மூன்று வாரங்களின் பின்பு ஆரம்பிக்கப்பட்ட தென்றால் அது நிச்சயமான சக்திகளால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டதென்பதில் சந்தேகமில்லை.

சிங்கள பௌத்த பேரினவாத சக்திகள் சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் விதைக்கும் பௌத்த சிங்கள மேலாதிக்க சிந்தனை காரணமாக சுயலாபம் தேடும் அரசியல் சக்திகளை இனவன்முறைகளில் இறக்கக் கூடிய வாய்ப்பை உருவாக்குகின்றன. அதன் எதிர் விளைவே ஒடுக்கப்படும் மக்களை அடிப்படைவாத சக்திகள் பயன்படுத்தக் கூடிய களத்தை உருவாக்குகின்றன.

எனவே சிங்கள சஹ்ரான்களே முஸ்லிம் சஹ்ரான்களை உருவாக்குகிறார்கள். என்ற சுனில் ஹந்து ரெந்தியின் கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டால் மட்டுமே இந்நாட்டில் உண்மையான சமதானம் உருவாக முடியும்.

# உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி - 2019

ICC CRICKET WORLD CUP
ENGLAND & WALES
2019



மே 30 - ஜூலை 14




## உலகக் கிண்ண சாதனைகள்

**அதிகூடிய ஓட்டங்கள்**
சச்சின் டெண்டுல்கர்
**இந்தியா**
போட்டிகள் : 45
ஓட்டங்கள் : 2278

**அதிகூடிய தனிநபர் ஓட்டங்கள்**
மார்ட்டின் குப்தில்
**நியூஸிலாந்து**
எதிர் : மே.இ.தீவுகள்
ஓட்டங்கள் : 237* (2015)

**சிறந்த பந்து வீச்சு**
கிளென் மெக்ராத்
**அவுஸ்திரேலியா**
சிறந்த பெறுதி : 7/15
எதிர் : நமீபியா

**அதிகூடிய விக்கெட்டுகள்**
கிளென் மெக்ராத்
**அவுஸ்திரேலியா**
போட்டிகள் : 39
விக்கெட்டுகள் : 71

**அதிக பிடிகள் (விக்கெட் காப்பாளர் தவிர)**
ரிக்கி பொன்டிங்
**அவுஸ்திரேலியா**
போட்டிகள் : 46
பிடிகள் : 28

**அதிகூடிய பிடிகள் (விக்கெட் காப்பாளர்)**
அடம் கில்கிறிஸ்ட்
**அவுஸ்திரேலியா**
போட்டிகள் : 31
பிடிகள் : 45

**அதிக ஸ்டம்பிங்**
குமார் சங்கக்கார
**இலங்கை**
போட்டிகள் : 30
ஆட்டமிழப்பு : 10

**அதிவிரைவான இரட்டைச் சதம்**
கிறிஸ் கெய்ல்
**மே.இ.தீவுகள்**
எதிர் : சிம்பாப்வே
138 பந்துகள் (2015)

**அதிவிரைவான 150 ஓட்டங்கள்**
ஏ.பி.டி. வில்லியர்ஸ்
**தென்னாபிரிக்கா**
எதிர் : மே.இ.தீவுகள்
64 பந்துகள் (2015)

**அதிவிரைவான சதம்**
கெவின் ஓ'பிரைன்
**அயர்லாந்து**
எதிர் : இங்கிலாந்து
50 பந்துகள் (2011)

**அதிவிரைவான அரைச் சதம்**
பிரண்டன் மெக்கலம்
**நியூஸிலாந்து**
எதிர் : இங்கிலாந்து
18 பந்துகள் (2015)

Published by Youcricketer.com

## உலகக் கிண்ணப் போட்டியில் பங்குபற்றும் அணிகளின் விவரங்கள்

**இங்கிலாந்து** தரவரிசை 1
பயிற்றுநர் : **ட்ரெவர் பெய்லிஸ்**
12 | சிறந்த அடைவு இ.போ. 1979, 1987,1992
சாதனைகள் : வெ:41, தோ:29, சமநிலை: 2

**இந்தியா** தரவரிசை 2
பயிற்றுநர் : **ரவி சாஸ்திரி**
12 | 02 | சம்பியன்: 1983, 2011
சாதனைகள் : வெ:46, தோ:27, சமநிலை: 2

**அவுஸ்திரேலியா** தரவரிசை 5
பயிற்றுநர் : **ஜஸ்ரின் லாங்கர்**
12 | 05 | சம்பியன்: 1987, 1999, 2003 2007, 2015
சாதனைகள் : வெ:62, தோ:20, சமநிலை: 2

**மே.இ.தீவுகள்** தரவரிசை 8
பயிற்றுநர் : **புளோயிட் றிஃபர்**
12 | 02 | சம்பியன்: 1975, 1979
சாதனைகள் : வெ:41, தோ:29, சமநிலை: 1

**தென்னாபிரிக்கா** தரவரிசை 3
பயிற்றுநர் : **ஓட்டிஸ் கிப்சன்**
08 | சிறந்த அடைவு அ.இ. 1992, 1999,2007, 2015
சாதனைகள் : வெ:35, தோ:18, சமநிலை: 2

**பாகிஸ்தான்** தரவரிசை 6
பயிற்றுநர் : **மிக்கி ஆர்தர்**
12 | 01 | சம்பியன்: 1992
சாதனைகள் : வெ:40, தோ:29, சமநிலை: 2

**இலங்கை** தரவரிசை 9
பயிற்றுநர் : **ஹத்துருசிங்க**
12 | 01 | சம்பியன்: 1996
சாதனைகள் : வெ:35, தோ:35, சமநிலை: 3

**நியூஸிலாந்து** தரவரிசை 4
பயிற்றுநர் : **ஹரி ஸ்ரீட்**
12 | சிறந்த அடைவு இ.போ 2015
சாதனைகள் : வெ:48, தோ:30, சமநிலை: 1

**பங்களாதேஷ்** தரவரிசை 7
பயிற்றுநர் : **ஸ்ரீவ் ரூட்ஸ்**
06 | சிறந்த அடைவு கா.இ. 2015
சாதனைகள் : வெ:11, தோ:20, சமநிலை: 1

**ஆப்கானிஸ்தான்** தரவரிசை 10
பயிற்றுநர் : **பில் சிமென்ஸ்**
02 | சிறந்த அடைவு குழு நிலை 2015
சாதனைகள் : வெ : 1, தோ : 05, சமநிலை: 0



உலகக் கிண்ணப் போட்டிகளுக்கான ஐ.சி.சி.யின் நடுவர்கள் மற்றும் போட்டி நடுவர்கள் குழாம்




உலகக் கிண்ணப் போட்டிகளுக்காக ஐ.சி.சியால் வெளியிடப்பட்ட உத்தியோகபூர்வ வழிகாட்டல் நூல்கள்

ப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 25.05.2019 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.